குழந்தைகள் பத்திரிகை
6-7-75
50 காசு

கோகுலம்



நாடறிந்த ஒன்று, நம்பகம் நன்று!



கேமல் இங்க்

உங்கள் மேசையில் ஒரு பாட்டில் இருந்தாலே, பெருமை கூடும், தங்குடையின்றி எழுத்து ஓடும். பளிச்சிடும் ஆறு வண்ணங்களில், வாஷபின் ராயல் ப்ளூ உள்ளிட, கிடைக்கிறது.

கேமல் ஸ்டேஷனரி
படைப்பகம்

வழங்கிடும் பிற: கம், பேஸ்ட், டூப்ளிகேட்டிங் இங்க், ஸ்டாம்ப் பேட், மார்க்கிங் இங்க், இன்னும் பலப்பல.

Vision 751 Tam



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் - பாரதியார்

சந்தா விவரம்:

உள்நாடு

ஒரு வருடம் ரூ. 13-00
ஆறு மாதம் ரூ. 6-50

வெளிநாடுகள் :


ஆண்டுச் சந்தா ரூ. 27-50

கோகுலம்

மலர் 4 □ இதழ் 7

ஜூலை 6, 1975

ராட்சஸ ஆனி 22




1. இந்த மூன்று மரங்களும் விசேஷமான குணங்களை உடையவை. இவற்றின் பெயர் என்ன? எங்கு உள்ளன? என்ன விசேஷ குணம்?

2. வளைந்த முனையுடைய இந்தக் கத்தியை வேலைப்பாடமைந்த தோலினாலான பெல்டில் இணைத்துக் கட்டிக் கொள்வார்கள். யார்? இதன் பெயர் என்ன?

3. கடல் பாம்பு எனப்படும் - ஓர் ஃபிஷ் (Oar Fish) துடுப்பு மீனுக்கும் சுறா மீனுக்கும் நடக்கும் சண்டையில் எதற்கு வெற்றி கிடைக்கும்?








4. நீர் யானையைப் பார்த்தால் சாது போல் இருக்குமே, இங்கு முதலையை இந்தக் கடி கடிக்கிறதே ஏன்?

(விடைகள்
31ம் பக்கம்)

இது என்ன?



அறநெறி

7. ஆசை அல்லலைத் தரும்

தன் பொருளை விரும்புவது பற்று; பிறர் பொருளை விரும்புவது ஆசை. பிறர் பொருளை அதிகமாக விரும்புவது பேராசை.

> "பேராசை யெனும் பிணியில் பிணிபட்
> டோரா வினையேன் உழலத் தகுமோ?"

என்கிறார் அருணகிரி நாதர்.

முதலில் ஆசையை அகற்ற வேண்டும்; பின்னர் பற்றையும் அகற்ற வேண்டும். பற்றும் அவாவும் வேருடன் போனால் பிறவி போகும். இதனைக் கம்ப நாட்டாழ்வார்,

> "பற்றவா வேரோடு
> பகையறப் பிறவி போய்"

என்கிறார்.

கோடைக் காலம். கொதிக்கின்ற வெய்யில். பறவைகளும் மரங்களின் நிழலில் ஒதுங்கி யிருந்தன. செடி கொடிகள் வாடியிருந்தன.

ஓர் ஏழை நடந்து பிரயாணம் செய்து கொண்டிருந்தான். அவனுக்குக் குடை யில்லை. பாதரட்சை இல்லை. பசியும் தாகமும் இருந்தன. அந்த வழியில் ஒருவர், தனவந்தர். அயல் தேசம் போய்ப் பெருஞ் செல்வமுடன் ஒரு குதிரை மீது வந்து கொண்டிருந்தார். அவர் காலில் உயர்ரகப் பாதரட்சை இருந்தது. உயர்ந்த வெளி நாட்டுக் குடை பிடித்துக் கொண்டிருந்தார்.

ஏழை அவரை வணங்கினான். "ஐயா! நான் ஏழை. இன்னும் நெடுந்தூரம் நடந்து போக வேண்டும். நீரோ குதிரை மீது போகின்றீர். உமக்குப் பாதுகை எதற்கு? என் கால் பொடி மணலால் சுடுகின்றது. தயவுசெய்து இந்தப் பாதரட்சையை எனக்குத் தாரும்" என்று தீன சுரத்தில் கேட்டான்.

அத்தனவந்தர் தயாள குணமுடையவர். சிறிதும் சிந்திக்காமல் அந்த உயர்ந்த பாதரட்சையைக் கழற்றிக் கொடுத்தார்.

ஏழை அதனை அணிந்து துன்பம் தணிந்து அவரைப் பணிந்தான். பின்னர் உள்ளத்தில் ஆசைக் கனல் எழுந்து கொழுந்து விட்டு எரிந்தது.


"ஐயா! நீர் உத்தமமான குணம் படைத்தவர். உமக்கு நிரம்ப வணக்கம். குதிரை மீது பிரயாணம் புரியும் நீர் விரைந்து வீட்டுக்குப் போய்விடுவீர். நான் நடந்து போக வேண்டும். ஆதலால் தங்கள் குடையை ம் தாருங்களேன்" என்றான்.

தவமும் மனமும் படைத்த அந்தத் தயாநிதி உடனே தம் விலையுயர்ந்த குடையைக் கொடுத்தார். ஏழை குடையைப் பெற்றுக் கொண்டான். அவன் அந்தப் பிறப்பில் விலை கொடுத்து அது போன்ற குடை வாங்க முடியாது. இப்போது அவனுடைய உள்ளத்திலே பேராசையாகிய பெருந் தீ மூண்டு எரியத் தொடங்கியது.

"ஐயா! உமக்கு மிகவும் வணக்கம் செலுத்துகிறேன். ஆ! என்ன தயாள குணம்! இது போன்ற உத்தமரைக் காண்பது அரிது. நான் மிகவும் ஆச்சரியம் அடைகின்றேன். நான் கேட்டவுடன் வாட்டமின்றிக் குடையைத் தந்தீர், பாதுகையைத் தந்தீர்.



• திருமுருக கிருபானந்தவாரியார் •



குதிரையையும் கொடுப்பீராக. உமக்கு நிரம்பப் புண்ணியம் வரும்'' என்றான்.

உடனே அத்தனவந்தர் குதிரையை விட்டு இறங்கினார். குதிரையை நமக்குக் கொடுக்கும் பொருட்டே இறங்குகிறார் என்று ஏழை எண்ணினான்.

''பேராசை பிடித்த பேதையே! பாதுகையைத் தந்தேன்: குடையைக் கொடுத்தேன். குதிரையையும் கேட்கின்றாய். குதிரையைக் கொடுத்துவிட்டு நான் நடந்து போவதா? உன் ஆசைக்கு எல்லை இல்லையா?'' என்று இடித்துரைத்து, சவுக்கால் பளார் பளார் என்று அவன் முதுகில் பல அடிகள் கொடுத்தார்.

ஏழையும் விவேகம் உள்ளவன்தான். எனவே, ''ஐயா! சவுக்கடி பட்டது பெரிதன்று. சந்தேகம் தீர்ந்ததே பெரிது. இல்லையேல் பாதுகையைத் தந்தவர், குடையைத் தந்தவர், குதிரையைக் கேட்டிருந்தால் தந்திருப்பார். கேளா மற்போனோமே என்று இறக்கும் வரை உறக்கம் வராது. இப்போது என் சந்தேகம் தீர்ந்தது'' என்று கூறிக் கும்பிட்டான் அவன்.

ஆதலால் ஆசை அல்லல் தரும்.

சுந்தரத்துக்குக் கோபமாய் வந்தது. அடுத்த வீட்டுப் பார்வதம் அந்த மூன்று பேரையும் என்ன பாடுபடுத்துகிறாள், என்று. சுந்தரத்துக்கு அந்த மூவரையும் பார்க்கும் பொழுது வருத்தமே மேலோங்கி நிற்கும்.

சுந்தரம் ஓர் ஆபீஸில் வேலை பார்த்து வந்தான். அவனது வீட்டுக்கு அடுத்துள்ள வீட்டில் பார்வதம் வாழ்ந்து வந்தாள். அவளது கணவன் பரமேசுவரன் குட்டி போட்ட பூனை போல வீட்டையே சுற்றி வருவார். பார்வதம் இஷ்டம் போல் சினிமா, லேடீஸ் கிளப் என்றெல்லாம் சுற்றிவிட்டு வருவாள். அதற்குள் அந்த மூன்று பேரும் சோறு வடித்திருப்பார்கள். உண்டு விட்டு மறுபடியும் சுற்றக் கிளம்பிவிடுவாள். பரமேசுவரனுக்கு அவளை அடக்கத் தைரியம் இருக்காது. வரும் போது பார்வதத்தின் கையில் ரொட்டிப் பாக்கெட் இருக்கும். என்றைக்காவது ஒரு நாள் அந்த மூவருக்கும் — ஏழைக்கு ஆப்பிள் பழம் கிடைப்பது போல்— ரொட்டி கிடைக்கும். மற்ற நாட்களில் பரமேசுவரனும், பார்வதமும் கால் மேல் கால் போட்டுக் கொண்டு அதைத் தின்ன ஆரம்பித்துவிடுவார்கள். இத்தனைக்கும் அந்த மூன்று பிள்ளைகளும் பார்வதத்தின் அண்ணன் குழந்தைகள் தாம். அந்த மூவரும் சோற்றைத் தின்று விட்டு அரட்டையடிக்க மாட்டார்கள்.

தினமும் நாலு மணிக்கு எழுந்து குளித்துவிடுவார்கள்; பின் காலைச் சாப்பாடும், மதியச் சாப்பாடும் தயாராகும். ஒன்பது மணிக்குள் சாமான்களை யெல்லாம் விளக்கி வைத்துவிட்டு, கல்வி கற்கச் செல்வார்கள். திரும்பி வந்ததும் காப்பி போடும் வேலை இருக்கும். இரவுச் சாப்பாடு தயாராகும். இரண்டு தம்பியரும் மாவாட்டும்போது, தமக்கை சமைத்துக் கொண்டிருப்பாள். இரவுச் சாப்பாடு முடிந்ததும் சாமான்களை மறுபடியும் விளக்கிக் கழுவிவிட்டு, படிக்க அமருவார்கள். இரவு பத்தரை மணி ஆகும், படுப்பதற்கு. மேலும் வாரம் ஒரு முறை வீடு கழுவிவிடுவார்கள்; தோட்டத்தை வேறு கவனித்துக் கொள்வார்கள். பாவம்!

சுந்தரத்துக்குத்தான் அவர்கள் மேல் இரக்கம் ஏற்பட்டதே தவிர, பார்வதத்துக்கு இம்மியளவுகூட இரக்கம் ஏற்படுவதில்லை. தேர்வில் மார்க் குறைவாக எடுத்தால் ஒரு நாள் பட்டினி கிடந்துதான், பார்வதத்திடம் கையெழுத்து வாங்க முடியும்.

இத்தனைக்கும் அந்த மூன்று பேரின் அப்பா மாதம் ஒரு முறை பார்வதத்தின் வீட்டுக்கு விஜயம் செய்து பணம் தந்து விட்டுச் செல்வார். 'அதெல்லாம் பார்வதத்துக்குத்தான்; பார்வதம்தானே எடுத்துக் கொள்வாள் போலும்' என்று நினைத்தான் சுந்தரம்.

சுந்தரம் அந்தக் குழந்தைகளுடன் பேசியதுகூட இல்லை. அவன் மனைவிதான் கேட்டு வந்து சொல்வாள். பெண்கள் வாயில்தான் ஒரு விஷயமும் தங்காதே!

'இந்த மாதம் பார்வதத்தின் தமையன் வரும்போது இதையெல்லாம் கூற வேண்டும்' என்று எண்ணிக் கொண்டான், சுந்தரம்.

அன்று இரவு அவன் சாப்பிட வரும் போது அவன் மனைவி கூறினாள்:

''இளையவன் தன் பேனாவைத் தொலைத்துவிட்டானாம். இன்று பள்ளிக்கே செல்லவில்லை. பட்டினிதான் கிடந்தானாம். தொலைப்பவர்களுக்கெல்லாம் இந்தப் பேனாதான் லாயக்கு என்று மட்டரகப் பேனா ஒன்றை வாங்கிக் கொடுத்து இருக்கிறாளாம். பாவம், தாயில்லாப் பிள்ளைகள் எவ்வளவு துன்பத்தை அனுபவிக்கிறார்கள்?''

தனது இதயமென்னும் தாளில் இரக்கம் என்னும் பேனா கொண்டு அதை எழுதிக் கொண்டான், சுந்தரம். அந்த மாதம், அந்தக் குழந்தைகளின் தந்தையை ஒரு நாள் கடை வீதியில் பார்த்தான் சுந்தரம். தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டபின் பேச்சைத் தொடங்கினான்:

''நீங்கள் மாதம் எவ்வளவு பணம் கொண்டு வருவீர்கள்?''

''இருநூற்றைம்பது ரூபாய்க்குக் குறையாமல் கொண்டு வருவேன்.''

''அப்படியிருந்தும் பார்வதம் அவர்களைக் கொடுமைப்படுத்தக் காரணம் என்ன?'' என்று சுந்தரம் எல்லா நிகழ்ச்சிகளையும் கூறிக் கேட்டான்.

அவர் கண்களில் நீர் தளும்பி நின்றது. ''எல்லாம் பாசத்தால் வந்த வினை' ஸார்!'' என்றார்.

''பாசத்தால் வந்த வினையா?'' — சுந்தரம் திகைத்தான்.

''என் மனைவி இறந்ததும் மனம் உடைந்து போனேன் நான். குழந்தைகளை வளர்க்கும் பிரச்னை என் தலை மீது



விழுந்தது. நான் வீட்டிலிருப்பது சில நாட்களே. பாதி நாட்கள் வெளியூர் சென்றுவிடுவேன். என் உத்தியோகம் அப்படிப்பட்டது. அதனால் என்னால் எப்படிக் குழந்தைகளை வளர்க்க முடியும்? பார்வதம் உதவிக்கு வந்தாள், 'அண்ணா கவலையை விடுங்கள். இவர்களை வளர்ப்பது என் பொறுப்பு' என்று. பெண்ணோ வேறு வீட்டுக்குப் போகக் கூடியவள். சமையல் எல்லாம் கற்றுக் கொள்ள வேண்டியவள். எனக்கு அவளை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளது. நான் பார்வதத்திடம் அவர்களைக் கொடுமைப் படுத்துவது போல் நடிக்க வேண்டும் என்றேன். முதலில் மறுத்தாள். பின் நான் இதைக் கூறியதும் ஒப்புக் கொண்டாள். இவளைப் பார்வதம் கொடுமைப் படுத்துவதால் இவள் சீக்கிரம் சமைக்கக் கற்றுக் கொண்டு விட்டாள். நன்றாகப் படிக்கவும் செய்கிறான். அக்கா தம்பிகளைப் பிரிக்க வேண்டாம் என்றுதான் பையன்களையும் இங்கு கொண்டு வந்து விட்டேன். பொறுப்புணர்ச்சி விரைவில் ஏற்பட்டுவிடும் என்று நான் நம்புகிறேன். பார்வதம் இவ்வளவு நாள் நான் கொடுத்த பணத்தில் பாதியை மட்டும் எடுத்துக் கொண்டு, மீதியை இவர்கள் பேரில் வங்கியில் கட்டியுள்ளாள். பார்வதம் நல்லவள்தான். சூழ்நிலை அவளைக் கெட்டவள்போல் காட்டுகிறது'' என்றார்.

''அப்படியானால் ரொம்பச் சந்தோஷம் ஸார்!'' என்று திரும்பிப் பார்க்காமல் விடுவிடு என்று வீட்டுக்கு வந்தான் சுந்தரம். அவன் மனைவி, ''இன்று என்ன நடந்தது தெரியுமா?'' என்று ஆரம்பித்தபோது, சுந்தரம், ''போதும், நிறுத்து!'' என்றான் எரிச்சலுடன்.





பாசத்தால் வந்த வினை

டபிள்யூ.எம். ஜீவலாஸ்டேர்

போஸ்ட் கார்டு போட்டி

முடிவுகள்


சகோதர சகோதரிகளே!

உங்கள் எல்லோருக்கும் எனது அன்பும் வணக்கமும். கோடை விடுமுறையைக் குதூகலமாகக் கழித்திருப்பீர்கள். பரீட்சையில் வெற்றி வாகை சூடி மேல் வகுப்புகளுக்குப் போயிருப்பீர்கள். உங்கள் விடுமுறையில் எனக்கு நிறைய வேலை கொடுத்து விட்டீர்கள். அப்பப்பா! எத்தனை கார்டுகள், எவ்வளவு விதமான கற்பனைகள், அனுபவங்கள், வர்ணனைகள், விமர்சனங்கள்! போஸ்ட் கார்டு போட்டியின் மூலம் உங்கள் கற்பனை வளத்தையும் எழுத்துத் திறமையையும் நன்றாக அறிய முடிந்தது. எனக்குத்தான் ஒரே குழப்பமாகி விட்டது. யாருக்குப் பரிசு கொடுப்பது என்பதைத் தீர்மானிக்கும் விஷயத்தில் ரொம்பச் சிரமப்பட்டு விட்டேன்! இந்த இதழில் ஐந்து தலைப்புகளுக்கான முடிவுகள்தான் வருகின்றன. அடுத்த இதழில் மற்ற ஐந்து தலைப்புகளுக்கான முடிவுகள் வெளியாகும். படித்து முடிவெடுக்க அவகாசம் வேண்டாமா? படிக்கப் படிக்க மாளாமல் மலைபோன்ற போஸ்டு கார்டு குவியல் குறையவேமாட்டேன் என்கிறதே, என்ன செய்ய? இதில், வீட்டில் செய்த விஷமத்துக்கான பரிசுத் தொகையை ஐந்து பேர்களும், அம்மாவைப் பற்றி எழுதி இரண்டு பேர்களும் பகிர்ந்து கொள்ளுகிறார்கள். உற்சாகத்துடன் இந்தப் போட்டியில் கலந்து கொண்ட உங்கள் எல்லோருக்கும் பாராட்டுக்கள்.

இந்தப் பெரும் பலப் பரீட்சையில்முடிவு சொல்ல உதவிய வாண்டுமாமா, காந்தன், குண்டுமணி, லென்ஸ், சாமா ஆகியோருக்கு நன்றி உரியது

ஆசிரியர்





எங்கள் ஊர்த் திருவிழா

திருவிழா என்றாலே ஊருக்கு ஒரு தனிக் களைதான் கட்டி விடுகிறது. பெரியோரும் சிறியோரும் தங்கள் கவலைகளை மறந்து உற்சாகத்துடன் குதூகலமாக வரவேற்கும் வைபவம் திருவிழா. எங்கும் கோலாகலம்; எங்கு நோக்கினும் குதூகலம். எங்கு நோக்கினும் திரளாய்த் திரண்டுள்ள மக்களின் மகிழ்ச்சி மிக்க ஆரவாரம். சித்திரைத் திருவிழா!

சித்திரா பௌர்ணமியில் வைகையில் வையாளியுடன் (ஆட்டமுடன்) இறங்கும் கள்ளழகர் தன் சகோதரி "ஸ்ரீ மீனாட்சியின் திருக்கல்யாணம் முடிந்து விட்டது" என்று இவ்வூர் வீரராகவப் பெருமாள் மூலம் அறிந்தவர் அப்படியே திரும்புகிறார்.

இவ்வாறு மதுரை வருகின்ற அழகரைக் காண லட்சக்கணக்கான மக்கள் பல ஊர்களிலிருந்தும் திரண்டு வருகின்றனர். இப்பெருமானுக்காக மக்கள் வெகு நேர்த்தியாய் விரதமிருந்து நீர்மெடுத்தாடுவதே இவ்விழாவின் தனிச் சிறப்பு. பௌர்ணமியின் முதல் இரவு கள்ளர்கள் குதிபோட்டுத் தூக்க அனந்தராயன் பல்லக்கில் கள்ளழகர் திருக்கோலத்தில் எழுந்தருளும் அழகின் எதிர்ச் சேவையைக் கண்டு உள்ளம் மகிழாத மக்கள் இத்தமிழ் நாட்டில் இல்லை. மறுநாள் காலை சதிருடன் நல்ல குதிரை ஏறி ஆனந்தமாய் வைகையில் இறங்குகிறார். கொட்டுடன் குழல் ஊதிலே ஒரு எட்டிலே வரும் குதிரை வாகனத்தைக் கண்டு கூத்தாடும் மக்கள் ஒருபுறம், ஒருவரோடொருவர் கைகோத்துக் "கோவிந்தா" எனக் கோஷமிட்டுக் குதிபோடும் கூட்டம் ஒருபுறம்; சக்கரையை வாரி இறைத்தும் பரந்தாமனின் புகழ் பாடும் பஜனைக் கூட்டம் மறுபுறம், கனி வகைகளுடன் மிளிரும் மண்டகப் படிகள் எங்கிலும் தம்மூர் வந்த அழகரை மக்கள் திரள்திரளாக வரவேற்கும் காட்சி இன்னொரு பக்கம் அமைந்த அற்புதம். வைகையாற்று வழியே மண்டகப்படிகள் தோறும் தங்கி வண்டியூர் சென்று பின் தேனூரில் சேஷ வாகனத்தில் மண்டுமா ரிஷிக்கு மோக்ஷம் கொடுக்கின்றார். அங்கிருந்து இராமராயர் மண்டகப்படிக்கு தங்கக் கருடனில் எழுந்தருளி அன்று இரவு முழுவதும், பத்து அவதாரங்களிலும் சேவை தருகின்றார். மக்கள் அனைவரும் ஏங்காமல் தூங்காமல் பாங்குடன் இராஜாங்கமாகவே சேவை சாதிக்கும் பெருமானைக் கண்டு பரவசமடைகின்றனர். மறுநாள் மைசூர் மண்டகப்படியில் பூப்பல்லக்கில் அலங்காரமாகித் தம் மலைக்குப் புறப்படுகின்றார், கூத்தாடிக் களித்த கள்ளழகர்.

இவ்வாறு தன் தங்கையின் திருமணம் பொருட்டு மதுரை மம்பதி எழுந்தருளும் ஸ்ரீ கள்ளழகர் திரளாய்த் திரண்ட மக்கள் சிலர் வாழ்த்திட, பலர் ஏற்றிட, மற்றும் பலர் போற்றிட ஆனந்தக் கூத்தாடித் தம் இருப்பிடம் சேர்கிறார்.

ஜெ. சுந்தரராஜன், மதுரை-3

வயது—பன்னிரண்டு

அம்மா

அம்மாவை எனக்கு ரொம்பப் பிடிக்கும். அம்மாவைப் பத்தி நான் அழகா எழுதாட்டாலும் எங்க அம்மா அழகாவே இருப்பா.

மங்கையர்க்கரசி
வயது - ஏழு மதுரை


என் அம்மா மிகவும் கண்டிப்பானவள். ஒரு நிமிஷம்கூடச் சும்மா இருந்தால் பொறுக்கமாட்டாள். பெண் குழந்தைக்கு வீட்டு வேலைகளில் ஆர்வம் வேண்டுமென்று ஒவ்வொரு வேலையாக அதிகரித்துக்கொண்டே இருக்கிறாள். மற்ற நேரங்களில் வீட்டுப் பாடம் எழுதத்தான் சரியாக இருக்கும். தெருவில் விளையாடும் குழந்தைகளைப் பார்த்து எனக்கும் ஆவல். அந்த ஏமாற்றத்தில் அம்மாவிடம் காரணமின்றிக் கத்துவேன். அம்மாவுக்கோ மற்றவர்கள் என் வேலையைப் பார்த்து 'ஏதடி! இந்தக் காலத்தில்கூட இப்படிப் பதவிசாக் காரியம் செய்யறது' என்று சொல்வதில் முகம் மலர்ந்து 32 பல்லும் தெரியும். எனக்கோ அழுகை அழுகையாக வரும். வீட்டுக்குள் இப்படி அம்மா என்னிடம் கோபிப்பதும் நான் அம்மாவைத் திட்டுவதும் தினப்படி நிகழ்ச்சி. லீவுக்காக அத்தை வீடு வந்தபோது அம்மாவைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் எனக்கு. அம்மாவுக்கோ நான் இல்லாமல் பொழுது போகவில்லையாம். படிபனும் ஒன்றுமே செய்வதில்லையாம். எனக்குப் பிடிக்கும் என்பதால் அவர்களுக்குச் சாப்பிட மனம் இல்லையாம். இதை என்னவென்று சொல்வது! நீறுபூத்த நெருப்புப் போல் பாசத்தின் பிரதிபலிப்பைப் புரிந்து கொண்டேன். அம்மா என்ற சொல்லே தெய்வீகமாக இன்று தோன்றுகிறது

எம். உமா, கும்பகோணம்
வயது பதினொன்று









நான் கேட்ட நல்ல ஹாஸ்யம்

நான்கு மனிதர்கள் ஒரு நாள் நாட்டில் கலப்படம் மிகுந்திருப்பதைத் தடுப்பதற்காகப் புறப்பட்டனர். முதல் மனிதன் ஒரு கடையில் பால் குடித்தான். அதில் கலப்படம் இருந்தமையால் அவன் இறந்தான். இரண்டாமவன் ஒரு ஹோட்டலுக்குள் சென்று உணவு உண்டான். அதிலும் கலப்படம் இருந்தமையால் அவனும் இறந்தான். மூன்றாமவன் மற்ற உணவு பிடிக்காமல் தேன் அருந்தினான். ஆனால் அவனும் இறந்து போனான். இதனைக் கண்ட நான்காமவன் தன்னுடைய நண்பர்கள் இறந்ததற்காக மனம் வருந்தி விஷத்தைக் குடித்தான். ஆனால் அதில் கலப்படம் இருந்ததால் அவனால் சாக முடியவில்லை.

ஓர் இந்தியன், ஓர் அமெரிக்கன், ஒரு ரஷ்யன் — ஓரிடத்தில் சந்தித்துக் கொண்டார்கள். முதலில் அமெரிக்கன் மற்ற இருவரையும் பார்த்து 'எங்கள் நாட்டு விமானங்கள் வானத்தைத் தொட்டுக் கொண்டு செல்லும்' என்றான். மற்ற இருவரும் எப்படி? என்றார்கள். 'ஆகாயத்துக்கு ஒரு அங்குலம் கீழே' என்றான். பிறகு ரஷ்யன் சொன்னான்: 'எங்கள் நாட்டுக் கப்பல்கள் பூமியைத் தொட்டுக் கொண்டு செல்லும்' என்றான். மற்ற இருவரும் எப்படி என்று கேட்க, 'தரைக்கு ஒரு அங்குலம் மேலே' என்றான். பிறகு இந்தியன் சொன்னான்: 'எங்கள் நாட்டு மக்கள் மூக்கினால் சாப்பிடுவார்கள்' என்றான். மற்ற இருவரும் எப்படி என்று கேட்க, 'ஒரு அங்குலம் கீழே' என்று வாயைக் காட்டினான்!

அ. ராஜீ, சென்னை-20
வயது பதினொன்று

நான் பார்த்த திரைப்படம்

முன்னுரை: அவன்தான் மனிதன். இந்தப் படம் ஓர் அல்ட்ரா மாடர்ன் சீதக்காதி கதை.

கதை: சிவாஜி மாமா சிங்கப்பூரில் மஞ்சுளா மாமி பின்னால் ஓடுகிறார். பின்னர் இருவரும் சேர்ந்து ஓடுகிறார்கள். பிறகு மாமி மண்டையைப் போடுகிறாள். மாமா இந்தியா வருகிறார். வத்திப் பெட்டித் தொழிற்சாலை வைக்கிறார். பரம்பரைப் பெருமையைத் திரும்பத் திரும்பப் பேசுகிறார். வாரிக் கொடுக்கிறார். தொழிலாளி முத்துராமனை முதலாளியாக்குகிறார். தான் விரும்பிய ஜெயலலிதா அக்காவை அவருக்கு மணமுடிக்கிறார். அது என்ன ஐயா! தம் சொத்தே போன மாதிரி சுந்தர ராஜன் அப்படி ஒலமிடுகிறாரே? சிவாஜி மாமா ஓட்டாண்டியாய், இல்லை என்று சொல்லாத சீதக்காதியாகச் சாகிறார்.

கதை விமரிசனம்: இரண்டு கதாநாயகர்கள்; இரண்டு கதாநாயகிகள்! இரண்டு தடவை குழந்தை பிறக்கும் காட்சி; இரண்டு தடவை குழந்தை இறக்கும் காட்சி! பெண்டாட்டியை இழந்த இருவர்; இரண்டாவதாய் மணம் செய்துகொள்ளும் முத்துராமன், எம். ஆர். ஆர். வாசு! இரண்டு திருவிழாக் காட்சிகள்! நமக்கு இரண்டு ஆஸ்ப்ரோவுடன் கதை முடிகிறது.

நடிகர்கள்:

சிவாஜி: இவர் இறப்பதற்கு முன் இருமுகிறார்; சாகும் போது இருமுகிறார். நல்லவேளை, செத்த பின் இருமவில்லை! ஏன்தான் சாவதற்கு முன்னால் வாயைக் குப், குப் என்று இன்ஜின் மாதிரி உப்பிக்கொள்கிறார் என்று தெரியவில்லை. மற்றபடி ஆர்ப்பாட்டமில்லா நடிப்பு.

முத்துராமன்: வழக்கமான நடிப்பு. சொல்வதற்கு ஒன்றுமில்லை.

மஞ்சுளா: துள்ளுகிறார்! துடிக்கிறார்! நிரந்தரமாய்த் துயிலுகிறார்.


ஜெயலலிதா: இவரும் படத்தில் வருகிறார்!

டைரக்டர் கவனிக்க: திருவிழாவில் ஷூவைப் பறி கொடுத்த சிவாஜி, சாகும்போது காலில் ஷூ அணிந்திருக்கிறாரே எப்படி?

முடிவுரை: ஆண்டவனே! எனக்கு இனி சினிமாப் பார்க்கிற ஆசையைக் கொடுக்காதேப்பா!

எல். வி. ஸ்ரீதர், சென்னை-7

வயது - பதினாறு





வீட்டில் செய்த விஷமம்

ஒரு நாள் வீட்டில் நானும் நடக்க முடியாத என் பாட்டியும் மட்டும் இருந்த நேரம். அலமாரியில் இருந்த மைசூர்ப்பாகு எடுக்க நான் முயன்ற போது அருகில் இருந்த எண்ணெய்ப் பாட்டில் தவறிக் கீழே விழ எண்ணெய் முழுவதும் கொட்டி விட்டது. நல்ல வேளை, பாட்டிலுக்குச் சேதமில்லை. மண் தரையாதலால் பாதி எண்ணெயைத்தான் எடுக்க முடிந்தது. என்ன செய்வது? அம்மா வந்து அப்பளம் பொரிக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தாள். ஒரு கிண்ணத்தை எடுத்துக்கொண்டு அம்மா அளவுடன் கேட்டதாக மூன்று வீடுகளில் வாங்கி வந்து எப்படியோ பாட்டிலை நிறப்பி விட்டேன். மூன்று நாட்கள் கழித்து எண்ணெய் கொடுத்தவர்கள் திருப்பி வாங்க வந்தபோது அம்மா புரியாமல் விழிக்க, அப்பா புரிந்தவராய் என்னைப் பார்த்து முறைக்க அப்பாவின் அடுத்த கணை விழுவதற்குள் அங்கிருந்து நழுவிவிட்டேன். திரும்பிவரும்போது அப்பாவின் கோபம் குறைந்திருந்ததோ, பிழைத்தேன்!

இ. கிருஷ்ணவேணி, தலைஞாயிறு

வயது - பதினாறு

எங்கள் அம்மா பேரீச்சம்பழம் வாங்கி ஒரு முறை அனைவருக்கும் கொடுத்துவிட்டு மீதியை பாட்டிலில் போட்டு அலமாரியில் வைத்தார்கள். இன்னும் கொஞ்சம் சாப்பிட ஆசைப்பட்டு யாருமில்லாத சமயத்தில் நான் ஒரு பெரிய பழத்தை எடுத்து வாயில் அவசரம் அவசரமாகப் போட்டுக் கொண்டேன். சிவப்பு (செந்தலை) எறும்புகள் நாக்கை நன்கு கடித்த பிறகுதான் அதில் எறும்பு இருந்ததை உணர்ந்தேன். அன்று நாக்கில் ஒட்டிக்கொண்ட எறும்புகளை அகற்றவும் முடியாமல் பேரீச்சையை மெல்லவும் முடியாமல் விஷயத்தை வெளியில் சொல்லவும் முடியாமல் விழித்ததை நினைத்தால் இன்றும் என் நாக்கு எரிகிறது.

பி. ஜெயஸ்ரீ, வெங்கடாத்ரி, அகரம்

வயது - பன்னிரண்டு

எங்கள் வீட்டுத் தீபாவளி மிகவும் கோலாகல மான தீபாவளி. காரணம், பட்சணங்கள் நிறை யச் செய்வார்கள். போன வருடம் அப்படியே நிறையச் செய்திருந்தனர். ஆனால் ஒன்றுகூட என் கைக்குக் கிட்டவில்லை. காலையில்தான் சாப் பிட வேண்டும் என்று கூறிவிட்டார் அப்பா. நல்லா இருக்கே! ராத்திரி 12 மணிக்குச் செய் ததைக் காலையில் 5 மணிக்குச் சாப்பிடுவதா? அதுவரை எப்படிப் பொறுப்பது? சமயம் பார்த் துக்கொண்டிருந்தேன். என் அப்பா நடு இரவு ஒரு மணிக்கே எண்ணெய் தேய்த்துக் குளிக்க ஏற் பாடு செய்து கொண்டிருந்தார். மெதுவாகப் பட்சணங்கள் இருந்த அறைக்குள் தம்பியுடன் நுழைந்தேன். இருட்டாக இருந்தது. விளக்குப் போட்டால் தெரிந்து விடும் என்பதற்காக இருட் டிலேயே தட்டுத் தடுமாறி ஏணியை வைத்துப் பரண் மேலிருந்த பட்சணங்களை வகைக்கு ஒன் றாகக் கீழே நிற்கும் தம்பியிடம் கொடுத்துவிட்டு மீண்டும் ஏணியை வைத்துவிட்டு அறையை விட்டு வெளியே சென்றிருந்த தம்பியிடம் கேட்டேன். அவன் அப்பாவின் பக்கம் கையைக் காட்டினான். திடுக்கிட்டுத் திரும்பினேன். நான் தம்பியிடம் கொடுத்த பட்சணங்கள் அப்பாவின் கையிலே இருந்தன. பிறகுதான் தெரிந்தது, சியக்காய்த் தூள் எடுப்பதற்கு நுழைந்த அப்பாவைப் பார்த்துத் தம்பி இருட்டிலேயே நழுவிவிட்டான். இருட்டில் நான் அப்பாவிடமே பட்சணங்களைக் கொடுத்திருக்கிறேன்!

எம். எம். கார்த்திகேயன், மதுரை
வயது - ஒன்பது

கடந்த அறுவடையின்போது ஒருநாள் இரவில் எங்கள் வீட்டில் குவியலாக நெல்லைக் கொட்டிப் பழங்கால மண் பானைகளில் (மிடா) அளந்து போட்டுக் கொண்டிருந்தார்கள். நெல்லின் மீது வைக்கப்பட்டிருந்த ஒரு மிடாவில் நான் தலையை விட்டுக் குரல் எழுப்பி விளையாடிக் கொண்டிருந் தேன். ஆரம்பத்தில் விளையாடுவதற்கு நன்றாகத் தான் இருந்தது. ஆனால் தலையை வெளியே எடுக்க முடியவில்லை. அழுது கொண்டே சப்த மிட்டேன். யார் காதிலும் நான் அழுதது கேட்க வில்லை போலும். பானையின் மீது குப்புறப் படுத்திருந்ததால் கழுத்து வேறு வலிக்க ஆரம் பித்தது. பானையை உடைக்கலாமென்றாலும் என்னால் முடியவில்லை. பானையுடனேயே உருண் டேன். அப்பொழுதுதான் அம்மா என்னைக் கண்டார்கள். மற்றவர்கள் உதவியுடன் மிடாவை நேராக நிற்க வைத்து என்னைத் தலைகீழாகப் பிடித்துக்கொண்டு எடுக்க நினைத்தார்கள். அப் பொழுதும் முடியவில்லை. என்னைத் தரையில் நிற்க வைத்து மிடாவைக் கவிழ்த்த நிலையில் எடுக்கப் பார்த்தும் முடியாததால் உடைத்து எடுத் தார்கள். இன்றும் அதைச் சொல்லிச் சொல்லி மற்றவர்கள் என்னைக் கேலி செய்வார்கள்.

பி. செல்வராஜ், மடத்துக்குளம்
வயது - பத்து



மறுநாள் தீபாவளி. நெய்யிலும் எண்ணெ யிலும் செய்து வைத்திருந்த பட்சணங்களின் வாசனை மூக்கைத் துளைத்தது. ''நாளைக்குக் குளித்த பிறகு புது டிரஸ் போட்டுண்டு சாப்பிட லாம்'' என்று மனம் இளகாமல் கூறி, எங்களை வெளியே அனுப்பி விட்டு எல்லாவற்றையும் ஒளித்து வைத்தாள் அம்மா. சிறிது நேரம் கழித்து நானும் என் அண்ணனும் உள்ளே வந்த போது ஒருவரும் இல்லை. மெதுவாகத் தேடி னோம். ஒரு பெரிய பாத்திரத்தை மூடி மேலே கல் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. கல்லை எடுத்து மூடியை அகற்றிவிட்டு அவசரம் அவசரமாக கைகளை விட்டோம் பாத்திரத்தினுள். கைகளை வெளியே எடுத்தால்... தோசை மாவு முழங்கை வரை ஒட்டிக்கொண்டிருந்தது!

ஆர். வரதராஜன், ஸ்ரீரங்கம்
வயது - பன்னிரண்டு

காலையிலிருந்து முரளியைக் காண வில்லை.

பள்ளிக்கூடத்துக்குப் புறப்பட்டவன், மாலை மங்கி இருள் சூழ்ந்த பின்னரும் வராமற் போகவே, அவனுடைய தாய் துடிதுடித்துப் போனாள். 'முரளிக்கு என்ன ஆயிற்றோ ?' என்ற கவலையும், பயமும் அவளைப் பிடித்துக் கொண்டன. அவனுடன் பள்ளியில் படிக்கும் ஓரிருவரைக் கேட்ட போது முரளி பள்ளிக்கே செல்ல வில்லை என்பது அவளுக்குத் தெரிய வந்தது. அவன் எங்கோ ஓடி விட்டான் என்பதை அவள் புரிந்து கொண்டு விட்டாள்.

அவன் ஏன் ஓடிப் போனான் ?

முரளி படித்து வந்த பள்ளியில் ஒவ்வொரு மாதமும் மாதாந்திரத் தேர்வு நடத்துவார்கள். முரளி கெட்டிக்காரனாக இருந்தாலும், அவனுடைய நாட்டம் படிப்பில் இல்லாமல் இருந்தது. கூடாத நண்பர்களுடன் அங்குமிங்கும் சுற்றுவது; எங்கேயாவது தோட்டத்துக்குச் சென்று அரட்டை அடிப்பது; இப்படியாக, தேவையில்லாத விஷயங்களில் அவனது ஈடுபாடு வளர்ந்து கொண்டு வந்தது. அது வளர வளர, தேர்வுகளில் அவன் வாங்கும் மதிப்பெண்கள் குறைந்து கொண்டே வந்தன. இந்த முறை அவன் இருபதாவது இடத்தில் இருந்தான்.

முரளியின் தந்தைக்கு இதில் அளவு கடந்த மன வருத்தம். அவன் பெற்றிருந்த மதிப்பெண்களைப் பார்க்கப் பார்க்க, அவருடைய வருத்தம் கோபமாக மாறியது. ஆத்திர மிகுதியில் அவனை நன்றாக அடித்து விட்டார். அவன் அடிபடுவதைக் கண்டு தாய்க்கே சங்கடமாக இருந்தது. 'இந்த முறை விட்டுவிடுங்கள். இனிமேல் நன்றாகப் படிப்பான்' என்று அவனுக்காகப் பரிந்து பேசினாள் தாயார். ஆனால் கை ஓயும் மட்டும் அடித்த பிறகே அவர் அடங்கினார்.

இந்த நிகழ்ச்சி முரளியின் உள்ளத்தில் அசட்டுத்தனமான வைராக்கியத்தைத் தோற்றுவித்தது. 'இனி இந்த வீட்டில் இருக்கக் கூடாது' என்ற தவறான முடிவுக்கு வந்தவன், பள்ளிக்குப் புறப்படுவது போல் கிளம்பி, ஊரை விட்டே ஓடி விட்டான்.

முரளியின் தாயும், தந்தையும் அவனைத் தேடாத இடமில்லை. அருமையான மக

வெறுப்பு ஏற்பட்டுக் குளம், கிணறு எங்கேயாவது விழுந்துவிட்டானோ என்று கூட நினைத்தார்கள். போலீஸ் ஸ்டேஷனில் புகாரும் எழுதிக் கொடுத்தார்கள்.


முரளியின் தாயார் அன்றிரவு முழுவதும் உறங்கவில்லை. ஒரு பிடி சோறு கூட உண்ணவில்லை. மகனைப் பற்றிய நினைவு அவளது நெஞ்சில் வேதனையை ஏற்படுத்தி, அவளை அழ அழச் செய்து கொண்டிருந்தது.

அந்த ஊரிலிருந்து பத்து கிலோமீட்டர் தொலைவில் ஒரு சிற்றூர். எட்டுக்குடி என்று பெயர். அங்கே சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு முருகனுக்குக் காவடி எடுக்கும் விழா. திரளான ஜனங்கள் அங்கு வந்தவண்ணம் இருந்தனர்.

திருவிழாவை ஒட்டிப் பல புதிய கடைகள் முளைத்திருந்தன. கண் கவர் வண்ணங்களில் ஏராளமான துணி வகைகள்; விதம் விதமான விளையாட்டுப் பொருள்கள் ; கூடை கூடையாகப் பழங்கள் ; மற்றும் பலதரப்பட்ட விற்பனைப் பொருள்கள். காவடி ஆட்டத்தைக் காண வந்தவர்கள், கிடைக்கும் நேரத்தில் தங்களுக்குப் பிடித்தமான பொருள்களை வாங்குவதற்காக அந்தக் கடைகளை மொய்த்துக் கொண்டிருந்தார்கள்.

முரளி தளர்ந்து போய் அங்கு வந்து சேர்ந்தான். பசி அவனை வாட்டி எடுத்துக் கொண்டிருந்தது. விவரம் புரியாத வயது ; பழக்கமில்லாத இடம்; முன்பின் தெரியாத மனிதர்கள். இந்த கைய சூழ்நிலையில் அவன் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தான்.

மேலே நடக்கச் சக்தியில்லாமல், வயிற்றைப் பிசைந்து கொண்டிருந்த



பசியின் உக்கிரம் தாளாமல் அவன் ஓரத்தில் சாலையைச் செப்பனிடுவதற்காகக் கொட்டி வைக்கப்பட்டிருந்த கற்குவியலின் மேல் உட்கார்ந்தான்.

அப்போது, சற்றுத் தூரத்தில் அவன் வயதை ஒத்த சிறுமி ஒருத்தி அழுது கொண்டிருப்பதைப் பார்த்தான். அவள் தன்னந் தனியே நின்று அழுது கொண்டிருந்ததைக் கண்டதும், திருவிழாவுக்காகத் திரண்டு வரும் கூட்டத்தில் தன் பெற்றோரையோ, அல்லது அழைத்து வந்தவர்களையோ விட்டு விலகி வந்திருக்க வேண்டும் என்று ஊகித்தான்.

அவள் அருகில் சென்று, ''ஏன் பாப்பா அழறே?'' என்று ஆதரவாகக் கேட்டான்.

''எங்க அம்மாவோட திருவிழா பார்க்க வந்தேன். கூட்டத்திலே அவங்களைப் பிரிஞ்சு வந்திட்டேன்....''

அழுகையைச் சற்று நிறுத்தி, இக்கித் திணறி அவள் சொல்லி முடித்தாள்.

''உனக்கு எந்த ஊர்?....

''திருத்துறைப்பூண்டியிலே எங்க அப்பா பெட்டிக்கடை வைச்சிருக்கார்.''

''கவலைப்படாதே. உன்னை நான் உங்கம்மாகிட்டே கொண்டு போய்ச் சேர்க்கிறேன்......''

அவளை அன்போடு தேற்றியவன், 'இப்போது என்ன செய்வது?' என்று யோசித்தான்.

முன்பு தன் தந்தையுடன் சென்னை சென்றிருந்தபோது கண்காட்சி ஒன்றில் பார்த்த சம்பவம் 'பளி'ரென்று அவனது நினைவுக்கு வந்தது.

யாரோ ஒருவர் தம் குழந்தையைத் தவறவிட்டு விட்டார். அந்தக் குழந்தையை அதிருஷ்டவசமாக இன்னொருவர் பார்த்துவிட்டு, கண் காட்சி நிர்வாகிகளிடம் ஒப்படைக்க அவர்கள் அந்தக் குழந்தையின் பெயர், அடையாளங்கள் அனைத்தையும் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தனர்.

அந்த நிகழ்ச்சி நினைவுக்கு வந்ததும், முரளி அந்தச் சிறுமியை அழைத்துக் கொண்டு திருவிழாவை முன்னிட்டு அமைக்கப்பட்டிருந்த துணிக் கடை ஒன்றை நோக்கி நடந்தான்.

அந்தக் கடையில் உள்ள துணி வகைகளின் உயர்வைப் பற்றியும், தரத்தைப் பற்றியும், விலை மலிவைப் பற்றியும் ஒலிபெருக்கி மூலம் விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அங்கு சென்றவன், அந்தச் சிறுமியைப் பற்றி அவர்களிடம் கூறினான்.

முரளியின் பேச்சும், அவனது புத்திக் கூர்மையும் அவர்களை வியப்பில் ஆழ்த்தின. அந்தச் சிறுமியின் பெயர், மற்றும் தேவைப்பட்ட விவரங்களைக் கேட்டுக் கொண்டு, ஒலிபெருக்கி மூலம் அறிவித்தார்கள்.

அந்தச் சிறுமியின் நல்ல காலம், அவளுடைய தாய் சில நிமிடங்களில் அங்கு வந்து சேர்ந்தாள்.

தன்னுடைய மகளைப் பார்த்ததும், தாய்க்குக் கண்களில் நீர் நிறைந்தது. அவளை வாரி அணைத்துக் கொண்டாள். பின்னர் கடையின் சொந்தக்காரர்களுக்குத் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டாள்.

''உங்கள் மகள் உங்களுக்குக் கிடைக்கக் காரணமாக இருந்தது நாங்களல்ல, அம்மா. இதோ இந்தச் சிறுவன் தான். இவனுக்குத்தான் நீங்கள் நன்றி சொல்ல வேண்டும்....'' என்றார் கடையில் இருந்தவர்களில் ஒருவர்.

வினோதானந்த்



சிறிது நேரத்தில், முரளியைப் பற்றிய விவரங்கள் அனைத்தையும் அந்தத் தாய் கேட்டறிந்து கொண்டாள்.

''தம்பி! அரை மணி நேரம் என் மகளைப் பிரிந்திருக்க என்னால் முடியவில்லை. துடித்துப் போய் விட்டேன். அப்படியிருக்க காலையிலிருந்து உன்னைக் காணாமல், உன் பெற்றோர் எப்படித் துடித்துக் கொண்டிருப்பார்கள்! உன்னுடைய நன்மைக்காகத்தானே உன் தந்தை உன்னைக் கண்டித்தார்? இன்றைக்கு நீ நல்ல முறையில் நடந்து கொண்டால்தானே, நாளை உன்னுடைய எதிர்காலமும் நன்றாக இருக்கும்? பெற்றவர்கள் மனம் வேதனைப் படும்படி நீ நடந்து கொள்ளலாமா?''

பெற்ற தாயினும் சாலப் பிரிந்து அவள் அவனுக்கு அறிவுரை கூறினாள்.

அதைக் கேட்கக் கேட்க முரளி துக்கம் மேலிட்டவனாக, அழத் தொடங்கி விட்டான். தன் தவற்றை அவன் பூரணமாக உணர்ந்து கொண்டு விட்டான் என்றே சொல்ல வேண்டும்.

அவனைத் தேற்றி, அந்தச் சிறுமியின் தாய் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றாள். நடந்து வந்த களைப்பை மறந்து, அவர்கள் பரிவுடன் அளித்த உணவால் பசியை மறந்து அன்றிரவு அவன் நிம்மதியாகத் தூங்கினான்.

மறு நாள் அந்தத் தாயே அவனை அவனது ஊருக்கு அழைத்துச்சென்று, அவனுடைய பெற்றோரிடம் சேர்ப்பித்தாள்.

'' இனிமேல் நீ நன்றாகப் படிப்பாயல்லவா ?......''

அந்தத் தாயின் கேள்விக்குப் பதிலாக, அவன் தலையை ஆட்டினான்.

''நீங்கள் எங்களுக்குச் செய்த இந்த உதவிக்கும், இவனுக்கு நல்ல விதமாகப் புத்தி புகட்டியதற்கும், உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை......''

உணர்ச்சிப் பெருக்கில், முரளியின் தாய் பேச முடியாது திணறினாள்.

''முரளி இனிமேல் நன்றாகப் படிப்பான். நீங்கள் கவலைப்படாதீர்கள். அவனை நான் திருத்தவில்லை. அவனுக்கு நான் புத்தி புகட்டவில்லை. எல்லாம் அந்த எட்டுகுடி முருகனின் அருள்தான், அம்மா...'' சிறுமியின் தாய் பேசிய பேச்சில் பெருந்தன்மையும், தன்னடக்கமும் மிளிர்ந்தன.

அடுத்து வந்த ஆண்டுத் தேர்வில், நல்ல முறையில் படித்துத் தேறிய முரளி தந்தையின் கையால் விலை உயர்ந்த பரிசு ஒன்றைப் பெற்றான்.

அன்று அடித்த கை, இன்று அவனை அணைத்துக் கொண்டிருந்தது!



அவர்கள் தந்த ஆலமரம்



காகம் ஒன்று ஆல மரத்தில்
வந்த மர்ந்தது
கனிந்து சிவந்த பழங்கள் தம்மைக்
கொத்தித் தின்றது
வேகமாகச் சிறகடித்துப்
பறந்து சென்றது
வெட்ட வெளியில் ஓரிடத்தில்
எச்ச மிட்டது.

எச்சத் துடன் தரையில் வீழ்ந்த
ஆலம் விதைகளில்
இரண்டு வாரம் சென்ற பின்னர்
ஒன்று முளைத்தது
உச்சி வெய்யில் தரையில் விழவே
நடந்து சென்றவர்
ஒருவர் அந்தச் செடியைக் கண்டே
உள்ளம் குளிர்ந்தார்.


ஆடு மாடு கடித்தி டாமல்
வேலி போட்டனர்
அவரே தினமும் மாலை நேரம்
தண்ணீர் ஊற்றினர்
பாடு பட்டே அந்தச் செடியை
வளர்த்து வந்ததால்,
பத்தே ஆண்டில் பெரிய மரமாய்
வளர்ந்து விட்டது.

கோடைக் காலம் குடையைப் போல
நிழலைத் தந்திடும்
கூட்டம் நடத்த மண்டபம் போல்
என்றும் உதவிடும்
ஆடிப் பாட எங்களுக்கும்
அரங்க மாகிடும்
அருமை யான ஊஞ்ச லாக
விழுது மாறிடும்.

சின்ன விழுது பல்து லக்கத்
தினமும் உதவிடும்
தேடி வந்து பறவை கிளையில்
கூடு கட்டிடும்
இன்னும் நூறு நூறு விதத்தில்
நன்மை செய்திடும்
இந்த மரத்தின் பெருமை யெல்லாம்
கூற முடியுமோ?

விதையை அன்று போட்ட காகம்
எங்கு திரியுதோ!
வேலி போட்டு வளர்த்த மனிதர்
எங்கு வாழ்வரோ!
உதவி பலவும் செய்யும் மரத்தை
நமக்குத் தந்தவர்
உலகில் எங்கே இருந்த போதும்
வாழ்க, வாழ்கவே!

அழ. வள்ளியப்பா



நிருபர்: நீங்கள் ஏன் பதினைந்து வருஷமா ராஜா வேஷம் போடறீங்க?

நடிகர்: முதல் முதலில் தலையில் மாட்டின கிரீடத்தைக் கழற்ற முடியவில்லை, அதனுல் தான்!



ஆசிரியர்: டேய்! என்னடா ஆடு திருடின மாதிரி முழிக்கிறே?

மாணவன்: அப்போ, பேறு திருடினுல் எப்படி முழிக்கணும் சார்?

— டி. மனேகரன், சென்னை-12




ஒருவர்: உங்களுக்கு நன்றி சொல்லணும்னு ரொம்ப நாளா நினைச்சிண்டிருக்கேன்.

மற்றவர்: அதுக்கென்ன இப்பொழுதுதான் சொல்லுங்களேன்.

ஒருவர்: ஒரு ஐந்து ரூபாய் கொடுங்களேன் நன்றி சொல்லிறேன்.

— எல். என். சுந்தரராஜன், காட்டுமன்னார்கோயில்!


இவர்கள் கேட்ட நல்ல ஹாஸ்யங்கள்



ஒருவர்: என்ன சார் குழந்தைக்குப் போய் இந்தக் கனிட்டு ரொட்டியைத் தரிங்களே. வயித்திலே கட்டி வந்திடுமே!

மற்றவர்: நல்ல ரொட்டி வாங்கிக் கொடுக்க நமக்குக் கட்டி வரணுமே சார்!

— எஸ். நடராஜன், மேலூர்



ஒருவர்: ஒரு டம்ளர் தண்ணீர் குடிக்க ஒரு ரூபாய் செலவாயிற்று.

மற்றவர்: அப்படியா ? . . . எப்படி?

ஒருவர்: ஓட்டலுக்குப் போய் ஒரு தோசை, இரண்டு இட்லி, ஒரு மசால் வடை சாப்பிட்டு ஒரு டம்ளர் தண்ணீர் குடித்தேன்!

— கே. நாகராஜ், நங்கைநல்லூர்

வக்கீல்: இதற்கு முன் நீ எங்காவது வேலை செய்த அனுபவம் உண்டா?

புதியவன்: இதற்கு முன் டாக்டர் சங்கரன் வீட்டில் வேலை செய்தேன்.

வக்கீல்: அதற்கு ஏதாவது அத்தாட்சி உண்டா?

புதியவன்: இதோ பாருங்கள், இந்த வெள்ளிக் கரண்டி அவர் வீட்டிலிருந்துதான் எடுத்து வந்தேன்.



குப்பன்: நான் எழுதும் எழுத்தை எவனுலும் படிக்க முடியாது.

கந்தன்: இது என்னடா பிரமாதம், நான் எழுதும் எழுத்தை என்னுலேயே படிக்க முடியாதே!

— ஆர். சத்தியநாராயணன், சித்தேரி






அப்பா: ஏண்டா கிட்டு! புதிதாக உனக்கு ஒரு வாத்தியார் வந்திருக்கிருராமே! அவர் ஓயாமல் பையன்களைத் திட்டுவாராமே. அவர் பெயர் என்ன?

கிட்டு: ஆசிர்வாதம் !

— என். பாலசுப்ரமணி, பாலப்பட்டி



நிருபர்: வானிலை அதிகாரி இருக்கிறாரா? மழை பற்றிய விவரம் தெரிந்துகொள்ள வேண்டும்.

நிலைய ஊழியர்: அவர் வருண ஜபம் பண்ணப் போயிருக்கிறார்.

— எம். கல்பனா, ஆதம்பாக்கம்



சாப்பிட வந்தவர்: சர்வர்! இரண்டு இட்லி கொண்டு வா, கூடவே பில்லையும் கொண்டா!

சர்வர்: ஏன் சார் பில்லையும் கூடவே கேட்கிறீங்க!

சாப்பிட வந்தவர்: நான் சாப்பிட்டு முடிக்கறதுக்குள்ளே ஒரு வேளை இட்லி விலை ஏறிப் போகலாம் அதற்காகத்தான்.

— ஏ. எல். அரவிந்தபாபு, சென்னை-2




தந்தை: என் பையன் நேற்று ஊதுவத்தி ஸ்டாண்டையே விழுங்கிட்டான்.

நண்பர்: ஐயையோ! அப்புறம் என்ன ஆச்சு?

தந்தை: ஒன்றுமே ஆகல்லே, எங்க வீட்டில் வாழைப் பழம் தான் ஊதுவத்தி ஸ்டாண்டு!

— ஜெயந்த பத்மநாபன், காஞ்சிபுரம்





ஒருவர்: ஓட்டல்களில் "டம்ளரில் கை கழுவக் கூடாது" என்று ஏன் போர்டு போட்டிருக்கிறார்கள்?

இன்னொருவர்: அவருக்கு அடுத்து வருகிறவர் அதைக் காபி என்று நினைத்துக் குடித்து விடாமல் இருக்கத்தான் போலிருக்கு.

— பி. ரவிச்சந்திரன், தஞ்சாவூர்

"கண்ணு தூங்கிட்டியா ?"

"ஆமாம், அம்மா!"

(விவித்பாரதியின் விளம்பர நாள்மை.)

— வி. எஸ். ரங்கா, சென்னை-50

ஆசிரியர்: பாபு, மனிதனுக்கு இன்றியமையாதவைகளில் ஏதேனும் ஒன்று கூறு.

பாபு: ஆரோக்கியம் சார்.

ஆசிரியர்: அடுத்து, ராமு நீ சொல்லு!

ராமு (ஏதோ ஞாபகத்தில்): ஏரோப்ளேனும் சார்!

— ஆர். ஆனந்தன், கோவை-52



சீனு: துணி துவைக்க முக்கியமானது எது?

கோபு: தண்ணீர்.

ராமு: சோப்பு.

சீனு: இரண்டும் இல்லை, துணி தான்.

— எஸ். ரமேஷ், சென்னை-88

ஒருவன்: "டேய்! சந்திரனைப் போய்த் தொடறதுக்கு எத்தனை நூல் பந்து வேணும்?"

மற்றவன்: ஒரே ஒரு நூல் பந்து மட்டும் போதும். ஆனால் அது சந்திரன் கிட்டே போற அளவு நீளமாக இருக்கணும்!

— பி. எஸ். ராஜு,
திருவனந்தபுரம்-1



நந்து சுந்து மந்து ⑦

கதை: வாண்டுமாமா
சித்திரம்: செல்லம்




என்னடாது சோதனை மேலே சோதனையா இருக்கே. இந்த ஓட்டையையே அடைக்க முடியல்லே. அங்கே காட்டு மரத்தோட கிளை...
மடையன்! என்ன இப்படி இதிலே கட்டிப் போட்டுட்டு படகு மூழ்கும் போது தான் மட்டும் தப்பிச்சுண்டு போறான். ஆ! நல்லவேளை இந்தக் குரங்குக் குச்சியை இதனாலே ஒரு அடி கொடுத்து... பேஷய்யா! குச்சி விடு பட்டுடுத்து...
அடப்பாவி! ஆத்தோட போகல்லியா நீ? ஏது நம்மை விடமாட்டான் போலிருக்கே இவன்.
வா, வா... இதனாலே வெடி வெடிச்சு உன்னைவிரட்டறேன்... ஒன்... டு... த்ரீ...!
ஆனால் மங்குவைப் பிணைத்திருந்த கயிற்றின் மறுமுனையிலிருந்த குச்சியைத் தாவிப் பிடித்து வேகமாகச் சுண்டி இழுத்து விடுகிறான் திருடன்
ஒரு குரங்குக்கு இத்தனை சாமர்த்தியமிருந்தா எனக்கு எவ்வளவு இருக்கணும்?
ஆ... அம்மாடியோவ்! தலை போச்சு...
ஆனாலும் மங்கு கிளையிலிருந்து விழவில்லை. கயிற்றின் சுருக்குத் தளர்ந்து அதன் உடலிலிருந்து கழன்று கொண்டது. துப்பாக்கியும் நழுவியது. மங்குவை மரத்திலிருந்து இறங்கச் செய்யத் திருடன் வேறு உபாயத்தைக் கையாண்டான்.
எல்லாம் தட்டாமாலை சுத்துதே. ஏதோ புகை வாசனை வேறே வருது...

தொடரும்

கிருமிகளோடு போராட்டம்

கௌசிகன்

1665ம் ஆண்டு கோடையில் ஒரு கதகதப்பான இரவு. லண்டன் வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. நிலா தன் ஒளியைத் திட்டுத் திட்டாக ஆங்காங்கே ஊற்றி இருந்தது. கனமான அந்த இரவின் அமைதியைக் கிழித்துக்கொண்டு கணகணவென்ற மணியோசையும் கல்தளத்தின் மீது கடபுடா என்று உருண்டு வரும் வண்டிச் சக்கரங்களின் ஒலியும் எழுந்தன. கரகரப்பான கட்டைக் குரல் ஒன்று ஏதோ ஆணை பிறப்பித்தது. வண்டியின் ஓட்டம் சட்டென்று நிறுத்தப்பட்டது.

கொள்ளை நோய் இங்கிலாந்தைக் கொடுமைப்படுத்திய ஆண்டு அது. அந்த வண்டி சவ வண்டி. கொள்ளை நோயினால் உயிரிழந்த உடல்களை அள்ளிப் போட்டுக் கொண்டு வந்துகொண்டிருந்தது. வண்டியோட்டி குரல் கொடுத்தான், ஒரு வீட்டின் முன்னே வண்டியை நிறுத்தி. ''உங்கள் வீட்டிலுள்ள இறந்த உடல்களைக் கொண்டு வாருங்கள்!'' விம்மல்களையும் கேவல்களையும் தொடர்ந்து உயிர் பிரிந்த உடல்களைச் சிலர் வீட்டினுள்ளிருந்து தூக்கி வந்தார்கள்.

சரித்திரத்தை ஆராய்ந்தால் இம்மாதிரியான கொள்ளை நோய்களின் கொடுமை தொடர்ந்து வந்திருப்பதை காணலாம். பதினான்காம் நூற்றாண்டில் ஏற்பட்ட கருஞ்சாவு (Black Death) என்ற நோயைத் தொடர்ந்து இங்கிலாந்தில் பிளேக் என்ற இந்தக் கொடிய நோய் அடிக்கடி தனது கோரக் கரங்களை நீட்டிக் கொடுமைப்படுத்தி இருக்கிறது. பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்நோயின் கொடுமை பயங்கரமாக இருந்தது. அப்போதே லண்டன் மிகப் பெரிய நகரமாகிவிட்டது. அரை மிலியன் ஜனங்கள்வரை வாழ்ந்தார்கள். குறுகலான தெருக்கள், மோசமான கழிவு நீர்க் கால்வாய்கள். தெருக்களின் நடுவே குப்பையும் அசுத்தமும் அழுகி நாற்றமடித்துக்கொண்டிருந்தன. சுத்தமான குடிநீர் கிடைப்பது அபூர்வம். பணக்காரர்கள் பகட்டாக உடை அணிந்து பவனி வந்தார்கள். தங்கள் இருப்பிடங்களை அழகுபடுத்துவதில் ஏராளமாகச் செலவிட்டார்கள். ஆனால் மிகச் சிலரே சுத்தமான வாழ்க்கைக்காகக் கவலைப்பட்டார்கள். இந்த நிலையில் வியாதிகள் தாராளமாகப் பரவலாயின.

வரண்ட கதகதப்பான பருவ நிலை பிளேக் நோய் பரவுவதற்கு ஏற்ற சூழ்நிலை. 1665ம் ஆண்டு கோடை லண்டனில் மிகக் கடுமையாக இருந்தது. அதற்கு முந்திய மாரியும் வசந்தமும் கூட வறட்சியாகவே இருந்தன. பிளேக் நோய் பரவுவதற்குஏற்ற சூழ்நிலை. வைத்தியர்களால் ஏதும் செய்ய இயலவில்லை. எந்த மருந்தினாலும் இந்தக் கொடிய நோயைக் கட்டுப்படுத்த முடியவில்லை. நகரிலிருந்த வைத்தியர்களில் பெரும்பாலோர் ஊரை விட்டே ஓடிவிட்டார்கள். உறுதி படைத்த ஒருசில டாக்டர்கள் மட்டுமே கொள்ளை நோயோடு போராடிக் கொண்டிருந்தனர். ஆனால் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை அவர்களுக்கும் இல்லை.

லண்டன் நெடுஞ்சாலைகளிலெல்லாம் மனித வெள்ளம் அலைமோதிக் கொண்டிருந்தது. கண்ணால் காண முடியாததொரு பயங்கரத்திலிருந்து தப்ப பீதியுடன் ஓடிக் கொண்டிருந்தனர் மக்கள். தேம்ஸ் நதியின் வழியாக ஒரு சிலர் படகுகளிலும் வேறு பல மிதவைகளிலும் நகரை விட்டுப் பிரிந்துகொண்டிருந்தார்கள். மன்னரும் அரசவையின் மற்றோரும் பத்திரத்தை நாடிக் கிராமங்களுக்குக் குடிபெயர்ந்துவிட்டார்கள்.

கிராம மக்களோ பீதி கொண்டு ஓடிவரும் நகர மக்களை முக மலர்ச்சியோடு வரவேற்கவில்லை. ஏதாவது ஒரு வழியில் அவர்கள் கொள்ளை நோயைக் கிராமப் புறங்களுக்கும் கொண்டு வந்து விடுவார்கள் என்றே அஞ்சினார்கள். ஆகவே அவர்களை ஒதுக்கவே விரும்பினர். விற்பனைக்கான உணவுப் பொருள்களை கிராமத்துச்சாலையில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைத்து விடுவார்கள். நகரிலிருந்து ஓடிவரும் மக்கள் அந்த உணவுப் பொருள்களை எடுத்



துக் கொண்டு அதற்கான பொருளை அங்கே வைத்து விட்டுப் போனார்கள். வரவேற்பு இல்லை, சந்திப்பு இல்லை, பேச்சில்லை.

பிளேக் என்ற அந்தக் கொடிய நோய் ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பரவுகிறது என்பது மட்டும் தெரிந்தது. ஆனால் அது எப்படிப் பரவுகிறது, எங்கிருந்து உற்பத்தியாகிறது என்பது தெரியவில்லை. ரொம்பப் பேர் காற்று அசுத்தமாகி விட்டது என்று நம்பினர். ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு இந்த நோய் கண்டால் அந்த வீடு முழுவதையும் பல வாரங்களுக்குத் தனிமைப்படுத்தி விடுவார்கள். வீட்டைப் பூட்டி அதற்குக் காவலும் போட்டுவிடுவார்கள். அபாய அறிவிப்பான சிவப்புச் சிலுவைக் குறி கதவிலே பதிக்கப்படும். அந்த வீட்டில் உள்ள அத்தனை பேரும் அந்தக் கொடிய பிளேக் நோய்க்குப் பலியாவதைத் தவிர வேறு வழியில்லை.

நாயும் பூனையும்தான் இந்தக் கொடிய நோயைப் பரப்புகின்றன என்று கருதப்பட்டது. ஆகவே நாய், பூனைகளைக் கொன்று ஒழிக்க ஆட்கள் அமர்த்தப்பட்டார்கள். ஆனால் பிளேக் நோய்க் கிருமிகளைக் கொண்டு வரும் எலிகள் தொல்லை இல்லாமல் பெருகிக் கொண்டிருந்தன!

எப்பாடு பட்டாவது எந்த வகையினாலேனும் இந்தக் கொள்ளை நோயை வெற்றிகொள்ள வேண்டுமென்று துடித்தார்கள். புகையிலை இந்த நோயைக் கட்டுப்படுத்தும் என்று ஒரு நம்பிக்கை. பிளேக் தனது உச்ச கட்டத்தில் இருந்த நிலையில் ஒவ்வொரு பள்ளிச் சிறுவனும் காலையில் கட்டாயமாகப் புகைபிடிக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டான்! இரவும் பகலும் எந்த நேரமும் சாலைகளில் கணப்பு எரிந்து கொண்டிருக்கச் செய்தார்கள், காற்றைச் சுத்தப் படுத்துவதற்காக. ஆனாலும் சாவின் எண்ணிக்கை குறையவே இல்லை. ஒரே வாரத்தில் லண்டன் நகரில் மட்டும் 7,000 பேர் மாண்டார்கள். அந்த ஆண்டு முடிவில் 68,000 லண்டன் வாசிகள் பிளேக் என்ற கொள்ளை நோய்க்குப் பலியானார்கள்.

அடுத்து வந்த மாரியில் நிலைமை கொஞ்சம் சீர்பட்டது. அடுத்து வந்த மாதங்களில் சாவின் எண்ணிக்கை குறையலாயிற்று. பணக்காரர்கள் நகருக்குத் திரும்பினார்கள். லண்டன் நகரம் மெள்ள மெள்ளத் தனது பழைய கலகலப்பைக் கொஞ்சம் கொஞ்சமாக திரும்பப் பெற்றுக் கொண்டிருந்தது. ஆனாலும் கொள்ளை நோயை ஒழிக்க 1666ல் இயற்கை ஒரு பயங்கரமான தீயை மூட்டியது. அந்தச் சொக்கப்பனையில் — பெருந் தீயில் — பல அழகான கட்டிடங்கள் நாசமானாலும் வியாதிகளை உற்பத்தி செய்து கொண்டு அழுக்கின் உறைவிடமாக





வீணாய் என்னை இடறும் பேரைச் சும்மா
விடமாட்டேன்
நானாய் எவர்க்கும் பகையாய் மாறித் தொல்லை
தரமாட்டேன்

—குடுக்கையார்

வண்ணப்படம்: எஸ். அனந்த

விளங்கிய பல பழம் வீடுகளும் குறுகலான சந்துகளும் எரிந்து சாம்பலாயின. கொள்ளை நோய் ஒழிந்தது.

விஞ்ஞானத்தின் முன்னேற்றமும் ஆராய்ச்சியின் தீவிரமும் மெள்ள மெள்ள இத்தகைய கொள்ளை நோய்களுக்கான காரணங்களை அறிந்து கொள்ளச் செய்தது. சூட்சம தரிசினி தோன்றியது. அதைப் பூரணமாகப் பயன்படுத்தும் விஞ்ஞானிகள் தோன்றினார்கள். கிருமிகள்தான் பல்வேறு நோய்களைப் பரப்புகின்றன என்ற உண்மை உணரப்பட்டது. கிருமிகளை ஒழித்து அவற்றை வெற்றி கொள்ளப் பல கோணங்களில் முயன்றார்கள். வெற்றியும் கண்டார்கள்.


அழுக்கும் அசுத்தமும்தான் வியாதிகளுக்குக் காரணம் என்பதை மனிதன் உணர்ந்தான். ஆனால் எப்படி எதனால் இவை வியாதிகளைப் பரப்புகின்றன என்பதை அறிய முடியவில்லை. ஏதாவது ஒரு பொருள் அழுக ஆரம்பிக்கும்போது அதிலிருந்து கிருமிகள் மந்திரத்தினால் உண்டாக்கப்பட்டது போலத் திடீரென்று உயிர் பெற்று எழுகின்றன என்று நம்பினார்கள். ஒரு மூட்டை தானியத்தை அப்படியே கவனிக்காமல் புழுத்துப் போகும்படி விட்டு விட்டால் அதனின்று எலிகள் தானாக உற்பத்தியாகும் என்றுகூட நம்பினார்கள்!

இந்த மூட நம்பிக்கைகளையெல்லாம் தகர்க்கும் ஒரு நிலை ஏற்பட்டது. நம்மைச் சூழ்ந்துள்ள காற்றிலேயே கிருமிகள் இருக்கின்றன என்ற உண்மையை உலகுக்கு உணர்த்தினார் **லூயி பாய்ஸ்சர்** என்ற பிரான்ஸ் தேசத்து விஞ்ஞானி. (இவரது வாழ்க்கைச் சரித்திரத்தையும், கண்டு பிடிப்புகளையும் பற்றி கோகுலத்தில் முன்பே வந்திருக்கிறது. அதை இங்கு நினைவு படுத்திக் கொள்ளுங்கள்) 'கிருமிகள் திடீரென்று தோற்றுவிக்கப்படுவதில்லை. ஒரு மாமிசத் துண்டைக் கெட்டுப் போக விடுவோமானால் காற்றிலுள்ள கிருமிகள் அதில் போய்த் தங்கி அதை அழுகச் செய்கின்றன. அப்போது அதிலிருந்து கிருமிகள் பல்கிப் பெருகுகின்றன'' என்றார் பாய்ஸ்சர். சாதாரணக் கண்களினால் காண முடியாத இக் கிருமிகள் விளைவிக்கும் அபாயங்களைத் தமது ஆராய்ச்சிகள் மூலம் விளக்கினார் பாய்ஸ்சர். ''கிருமிகளில் எத்தனையோ வகையுண்டு சில கிருமிகள் மனித இனத்துக்குக் கேடு விளைவிப்பவை. நன்மை விளைவிக்கும் கிருமிகளும் உண்டு'' என்றார் பாய்ஸ்சர்.

பால் தயிராவது எதனால் என்பதை ஆராய்ந்த பாய்ஸ்சர், ஒவ்வொரு பால் துளியிலும் ஏராளமான கிருமிகள் இருக்கின்றன. இவை பல மணி நேரங்களில் பல்லாயிரக் கணக்கில் பெருகிப் பாலைத் தயிராக்குகின்றன என்பதை அறிந்தார். கிருமிகள் கதகதப்பான சூழலில் பல்கிப் பெருகுகின்றன. ஆனால் உயர்ந்த உஷ்ண நிலையில் இவை மடிகின்றன என்பதையும் அறிந்தார்.

இன்றைக்கு நாம் பெறும் புட்டிப் பாலை முதலில் சூடாக்கிய பிறகுதான் பாட்டில்களில் அடைக்கிறார்கள். இதனால் கிருமிகள் அழிக்கப்படுகின்றன. இந்த முறைக்கு **பாஸ்கரைஸேஷன்** என்று பெயர்.

வியாதிக் கிருமிகளை இனம் கண்டு நோய்களைக் குணப்படுத்தும் பல்வேறு முறைகளுக்கு வழி வகுத்துக் கொடுத்தவர் பாய்ஸ்சர். குறிப்பிட்ட நோய்க் கிருமிகளை வளர்த்து அதை உடலில் நாமே புகுத்திக் கொண்டால் வெளியிலிருந்து அந்த நோய்க் கிருமி மனிதனைத் தாக்கும்போது அதை எதிர்த்துப் போராடும் சக்தியை உடலில் உண்டாக்கி விடலாம் என்பதைத் தம் ஆராய்ச்சி மூலம் அறிவித்தவர் லூயி பாய்ஸ்சர். இதற்கு **இனாகுலேஷன்** (தடுப்பு ஊசி) என்று பெயர். பாய்ஸ்சரின் முறைகள் எப்போதும் கவனமான விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சியில் உருவானவை. ஒரு குறிப்பிட்ட நோய் எந்த வகைக் கிருமியினால் உண்டாகிறது என்பதை முதலில் ஆராய்வார். அதன் பிறகு அதை அழிப்பது எப்படி என்பதை ஆராய்ந்து அறிவார். பாய்ஸ்சரின் ஆராய்ச்சிகள் மற்ற விஞ்ஞானிகளையும் மருத்துவர்களையும் ஊக்கமூட்டின. மிகக் கொடிய நோய்களை உருவாக்கும் கிருமிகள் எவை எவை என்பதை ஆராய்ந்து அறியலானார்கள். பிறகு அதை அழித்து மனித குலத்தை நோய்க் கிருமிகளிடமிருந்து காக்கும் மருந்துகளையும் கண்டார்கள்.



...அழகான ஆடைகளும் அதற்கு உதவின என்று !

MAFATLAL GROUP

நிச்சயமாக, மபத்லால் க்ரூப் அளிப்பவை நேர்த்தியான துணிமணிகள்தான் !

AIYARS-M. 458 TM



பரீட்சை பழம்

முன்னொரு காலத்தில் கஞ்சனூர் கிராமத்தில் ஒரு இளைஞன் வசித்து வந்தான். அவன் பெயர் செல்வன். மிகுந்த பணக்காரன். அவனது பெற்றோர்கள் அவனை ஒரு வேலையும் செய்ய விட மாட்டார்கள். அவனுக்கு வேண்டிய பணிகளைச் செய்ய நான்கு வேலை ஆட்களை நியமித்திருந்தனர். தாய் தந்தையர் அதிகமாகச் செல்லம் கொடுத்து வளர்த்து விட்டதனால் அவன் முழுச் சோம்பேறியாகவே மாறி விட்டான். உணவு கூட வேலையாட்கள் தான் ஊட்டி விட வேண்டும். வாழைப்பழம் என்றால் அவனுக்கு உயிர். ஆனாலும் அதையும் வேலைக்காரர்கள் தான்தோலை உரித்து அவன் வாயில் திணிக்க வேண்டும். அவ்வளவு சோம்பேறியாக வாழ்ந்து வந்தான். அவனைத் திருத்த யாராலும் முடியவில்லை.

ஒருநாள் பக்கத்து ஊரில் பெரும் திருவிழா வந்தது. திருவிழாப் பார்ப்பதற்காகச் செல்வன் தன் வேலைக்காரர்களுடன், வில் வண்டியில் 'ஜில்ஜில்' என்று கிளம்பி விட்டான். அது காட்டுப் பாதை. குண்டும் குழியுமாக இருந்தது. வேகமாகச் சென்று கொண்டிருந்த மாடுகள் திடீரென ஒரு பள்ளத்தில் விழுந்து விட்டன. வண்டி குடை சாய்ந்து விட்டது. "ஐயோ, அப்பா. செத்தேன்" என்று செல்வன் அலறினான். சிறு எறும்பு கூட அன்று வரை செல்வனைக் கடித்தது கிடையாது. அதனால் அவன் பயத்தினால் மிகவும் அலறினான். வேலையாட்களுக்கும் சரியான காயங்கள். அவர்கள் தங்கள் காயங்களைப் பெரிதாகக் கருதவில்லை. தங்கள் சின்ன எஜமானரின் காயங்களை பற்றித்தான் அதிகக் கவலை கொண்டார்கள்.

"டேய் வேலைக்காரர்களே, ஊருக்கு ஓடிப் போய் ஏதாவது மருந்து கொண்டு வந்து என் காயங்களுக்குப் போட்டு விடுங்கள். அல்லது நம்ம ஊர் மருத்துவரை அழைத்து வாருங்கள்" என்று அவர்களை விரட்டினான் செல்வன்.

"சரிங்க ... சின்ன எஜமான்" என்று சொல்லி இரண்டு வேலைக்காரர்கள் மருத்துவரை அழைத்துவர விரைந்தனர். பள்ளத்தில் விழுந்து கிடந்த காளை மாடுகளை எழுப்பி அதன் கால்களை நீவி விட்டனர் மற்ற இரு வேலையாட்கள்.


''ராமையா, வேலய்யா இங்கே-வாருங்கள்'' என்று அந்த இரு வேலைக்காரர்களையும் கூப்பிட்டான்.

''என்னங்க, சின்ன எஜமான்?''

''எனக்கு ரொம்பப் பசிக்குது. அதனாலே அந்தத் திருவிழா நடக்கிற கிராமத்திற்குப் போய் நிறைய வாழைப் பழங்கள் வாங்கி வாருங்கள்'' என்று கட்டளையிட்டான்.

''எஜமான் நீங்கள் தனியாக...'' என்று ராமையா இழுத்தான்.

''நான் பயப்பட மாட்டேன். நீங்கள் இருவரும் சென்று சீக்கிரம் வாருங்கள்'' செல்வன் விரட்டினான்.



• கமலவேலன் •

வெகுநேரம் செல்வன் தனியாக உட்கார்ந்திருந்தான். மருந்து வாங்கச் சென்றவர்களும் வரவில்லை; பழம் வாங்கச் சென்றவர்களும் வரவில்லை. அவனுக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. உடம்பு வலியும் அவனால் தாங்க முடியவில்லை. பசியினால் குழந்தை போல் தேம்பித் தேம்பி அழுதான்.

அப்பொழுது அந்த வழியாகச் சாமியார் ஒருவர் வந்தார்.

''குழந்தாய், ஏன் அழுகிறாய்? உனக்கு என்ன வேண்டும்?'' என்று கனிவுடன் கேட்டார் சாமியார்.

''சாமி, எனக்குப் பசிக்குது. சாப்பிட ஏதாவது வேண்டும்.''

உடனே சாமியார் தன் மடியிலிருந்து மோதிரம் ஒன்றை எடுத்துச் செல்வன் கையில் கொடுத்தார்.

''என்ன சாமி, பசிக்கு மோதிரம் கொடுத்து என்ன பிரயோசனம்? நீங்கள் என் வீட்டுக்குவந்தால் இதைவிட அழகான மோதிரம் நான் தருவேன்'' கோபத்துடன் செல்வன் சொன்னான்.

''தம்பி, கோபப்படாதே. இது சாதாரண மோதிரம் அல்ல. நீ என்ன கேட்டாலும் இது கொடுக்கும்.''

''நிஜமாகவா சாமி!'' வியப்புடன் வினவினான் செல்வன்.

'''ஓம் நமசிவாய' என்று ஐந்து முறை சொல்லி மோதிரத்தை அழுத்தித் தேய்த்தால் உனக்கு வேண்டுவன கிடைக்கும். எனக்கு நேரமாகிறது. நான் வருகிறேன்'' சாமியார் மறைந்துவிட்டார்.

சாமியார் சொன்னபடியே செல்வன் செய்தான்.

அப்பொழுது—

வானமே இடிந்து விழுவது போல பயங்கரச் சிரிப்பொலி கேட்டது. அச்சத்தை விளைவிக்கக் கூடிய ஒரு பூதம் செல்வன் முன்வந்து நின்றது. செல்வன் பூதத்தைப் பார்த்து 'ஓ'வென்று அலறினான். பற்கள் ஒன்றோடொன்று அடித்துக் கொண்டன.

''ஓ, இளைஞனே, பயப்படாதே. இன்று முதல் நான் உன் அடிமை. உனக்கு என்ன வேண்டும் கேள், தருகிறேன்'' சத்தம் போட்டுப் பேசியது பூதம்.

''எனக்குப் பசிக்குது. சாப்பிட ஏதாவது வேண்டும்.''

''ப்பூ! இவ்வளவுதானா...? இதோ!''

என்ன ஆச்சரியம்!

பலவகையான உணவுப் பண்டங்கள் செல்வன் முன் படைக்கப்பட்டன.

செல்வன் வியப்பால் வாய் பிளந்து நின்றான். எதைச் சாப்பிடுவது என்றே அவனுக்கு விளங்கவில்லை.

''ஏ! பூதமே, நீயும் கொஞ்சம் சாப்பிடு'' என்றான் செல்வன்.

''இவைகளைத் தொடமாட்டேன்.''

''ஏன்?''

''எனக்குத் தேவையான உணவை நான் உழைத்துத்தான் பெறுவேன்.''

''உழைப்பா? அப்படியென்றால்?''

"நானே வேலை செய்து அந்தப் பணத்தைக் கொண்டு பொருள்கள் — வாங்குவேன். உழைப்பு என்பது? அதுதான்."

"ஐய்யய்யோ ... அது ரொம்பக் கஷ்டமாச்சே!"

"சோம்பேறியாக வாழ்வது ரொம்பக் கேவலம் ஆச்சே!"

"அப்போ நான் கேவலமானவனா?"

"நிச்சயமாக நீ அப்படித்தான். விரைவில் நீ திருந்த வேண்டும். இல்லாவிட்டால்..." பூதம் அவனை நெருங்கியது.

"ஐயோ, பூதம் என்னைக் கொல்ல வருது! கொல்ல வருது. உன் சாப்பாடு எனக்கு வேண்டாம். நீயும் எனக்கு வேலை செய்ய வேண்டாம். இப்பொழுதே இந்த மோதிரத்தைக் கழற்றி எறிந்து விடுகிறேன்" என்று சொல்லிச் செல்வன் மோதிரத்தைக் கழற்றப் போனான். அப்பொழுது —

பூதம் இடி இடி என்று சிரித்தது!

"ஏ, அற்பனே! அந்த மோதிரத்தைக் கழற்றினால் உடனே உன் தலை வெடித்து நீ இறந்து போவாய்!"

"ஆ, கடவுளே! இந்தச் சாமியார் என்னை ஏமாற்றி விட்டாரே. உன்னிடமிருந்து நான் தப்ப வழியே கிடையாதா?"

"ஒரே ஒரு வழிதான் உண்டு..."

"என்ன...என்ன சொல்லு?"

"இன்று முதல் உழைக்க வேண்டும். உன் சோம்பேறித்தனத்தை விட்டொழிக்க வேண்டும்."

"உழைக்க வேண்டுமா?"

"ஆமாம். உனக்குத் தேவையான உணவுக்காகவும், உடைக்காகவும் வேலை செய்து, பொருளீட்டி வாழ வேண்டும். அதுதான் நீ தப்பிக்க வழி!" பூதம் கூறியது.

"நீ சொன்ன மாதிரியே உழைக்கிறேன். இனிமேல் சோம்பேறியாக இருக்க மாட்டேன். இது சத்தியம்." கெஞ்சினான் செல்வன்.

"அப்படிச் செய்யத் தவறினால் உன் உயிருக்கே ஆபத்து. ஜாக்கிரதை, நான் வருகிறேன்." பூதம் மறைந்து விட்டது.

சிறிது நேரம் சென்ற பிறகு வேலைக்காரர்கள் நால்வரும் அங்கு வந்தனர்.

ஒருவன் வழக்கம் போல் வாழைப் பழத்தை உரித்து வாயில் வைத்தான்.

"நானே உரித்துச் சாப்பிட்டுக் கொள்வேன். நீங்கள் யாரும் இனிமேல் எனக்கு வேலை செய்ய வேண்டாம். உழைப்புதான் உயர்வு" என்றான் செல்வன்.

விவரம் தெரியாமல் வேலைக்காரர்கள் விழித்து நின்றனர்.


சோம்பேறிச் செல்வன் அன்று முதல் சிறந்த உழைப்பாளியாக மாறி மகிழ்ச்சியாக வாழத் தொடங்கினான்.

டிராகோடன்-காம்ப்டாசோரஸ்-டிப்ளடோகஸ்

சாக பட்சிணி வகை டினோசார்களில் டிராகோடன் (Trachodon) என்பது ஒன்று. தாவரங்களையே உணவாகக் உட்கொண்டு வாழ்ந்த அபாயம்இல்லாத டினோசார் இது. டிராகோடன் என்றால் கரடு முரடான பற்களை உடைய என்று பொருள். இதை வாத்து அலகுபோன்ற வாயுடைய டினோசார் என்றும் அழைப்பார்கள். இடியோசைப் பல்லி என்ற பெயருடைய புராண்டாஸோரஸ் போலவே இதுவும் நாளின் பெரும் பொழுதைத் தண்ணீரிலேயே கழித்தது. இதன் கால்விரல்கள் ஜவ்வுத் தோலினால் இணைக்கப்பட்டிருந்தன. ரெப்டைல்ஸ் என்ற ஊர்வனவற்றின் ஆதிக்கத்தில் உலகம் இருந்த அந்தச் சகாப்தத்தின் கடைசிக் கட்டத்தில் டிராகோடன்கள் ஏராளமாக வாழ்ந்தன. டைராஞசரஸ் என்ற பயங்கர ராட்சத டினோசார்களுக்கு டிராகோடன்கள் அவைமிக்க உணவாகி வந்தன.

டிராகோடன்களுக்குப் பெரிய வாய். இதில் இரண்டாயிரம் பற்கள் இருந்தன. இந்தப் பற்கள் வெட்டும் பற்கள் அல்ல. அரைக்கும் பற்கள். இதன் தலை சப்பையாகவும் நுனியில் வாத்தின் அலகு போல அகன்றுமிருக்கும். ஜவ்வுத் தோல் கால் விரல்களை இணைத்திருப்பதும் வாத்து மூக்கும் — சதா நீரிலேயே வாழ்ந்த இதற்குப் பெரும் உதவியாக இருந்தன. சேற்றினுள் புதைந்துள்ள தாவரங்களைத் தன் பட்டையான மூக்கினால் கிளறி வெளியேற்றி உண்பதற்கு வசதியாக இருந்தது இதன் முகம். இந்த வகை டினோசார்களுக்குத் தாத்தாவாக வாழ்ந்ததின் பெயர்ப் **காம்டா சோரஸ்** (Campto saurus). தாவரங்களை உணவாகக் கொண்டு வாழ்ந்த டினோசார்களில் ஒரு புதிய இனம் தோன்றி வளரலாயின. இதை டினோசார்களின் இரண்டாவது பெரிய சகாப்தம் என்கிறார்கள். இந்தக் கால கட்டத்தில் தோன்றியதுதான் காம்ப்டா சோரஸ். வளையக் கூடிய பல்லி (Bent Lizard) என்பது இதன் பொருள். எல்லா டினோசார்களைப் போலப் பின்னங் கால்களினால் மட்டும் இது நடக்கவில்லை. தேவைப்படுமானால் முன்னங் கால்களைத் தரையில் ஊன்றி நான்கு கால்களினாலும்கூட காம்ப்டா சோரஸ் நடந்தது. வாத்து அலகு போன்ற முகங் கொண்ட டினோசார்களுக்கெல்லாம் மூதாதை—தாத்தா—இந்தக் காம்ப்டா சோரஸ். வாத்து மூக்கினால் தாவரங்களை அழுத்தி இழுத்துப் பறித்தது. இதன் பற்கள் தாடையின் பின்னால் வரிசை கட்டி வளர்ந்திருந்தன. இந்தப் பற்களினால் தாவரங்களை அரைத்து அசை போட்டுத் தின்றது.

காம்ப்டாசோரஸ் உருவத்தில் பெரியதல்ல. விகாரமான பூதாகாரமான உடலுடைய மற்ற டினோசார்களை விட இது வேகமாக ஓடியாடியது. ஆனால் காம்ப்டா சோரஸ்களுக்கு விரோதிகளிடமிருந்து தற்காத்துக் கொள்ள எவ்விதப் பாதுகாப்பும் கிடையாது. சிறிய உடலானதால் ஆழமான நீர் நிலைகளில் இறங்கியும் தப்புவதற்கில்லை. ஆகவே அலோசோரஸ் என்ற மாமிசப் பட்சிணிகளான டினோசாருக்கு இவை சுவையான உணவாயின. காம்ப்டாசோரஸின் கொள்ளுப் பேரனான டிராகோடன், மாமிச வேட்டையாடும் டினோசார்களிடமிருந்து சில வேளைகளில் தப்பின. ஏனென்றால் தாத்தாவை விடக் கொள்ளுப் பேரன் உருவத்தில் பெரியவனாக இருந்தான். காலப் போக்கில் அவனிடம் கொஞ்சம் திறமையும் கூடி இருந்தது.



டிராகோடன்

வாத்து மூக்கு டினோசார்களில் சில வற்றுக்கு அதன் தலையில் விநோத மான மூண்டு (Hump) தோன்றியது. இன்னும் சிலவற்றின் தலையில் நீண்ட குழல்கள் தோன்றின. நீருக்குள் மூழ்கும் போது சுவாசிப்பதற்கு இத்த கைய குழல்கள் பயனுடையதாக இருந் தன. இன்று நீரில் மூழ்குபவர்கள் பயன் படுத்தும் ஸ்நோர்கெல்ஸ் (Snorkels) என்னும் கருவியைப் போல. வாத்து மூக்கு, கால், சுவாசிக்கும் விசேஷக் குழல் அமைப்பு இவைகளுடன் இந்த டினோசார்கள் நிலத்தில் மாமிச வேட்டையாடும் ராட்சதன்களிட மிருந்து தப்பி நீரிலேயே வாழ்ந்து வந்தன.

டிப்ளடோகஸ் (Diplodocus) என்பது மற்றொரு தாவர உண்ணி டினோசார். புராண்டா சோரஸ் போன்ற தோற்றமானாலும் அதைவிட நீளமாகவும் பெரியதாகவும் இருந்தது இது. பூமியில் நடந்த மிருகங்களிலேயே மிகவும் நீளமான பிராணி இதுதான். இதன் மூக்கு நுனியிலிருந்து வாலின் முடிவு வரை இதன் நீளம் 90 அடிகள். மூன்று மாடிக் கட்டடத்தின் ஜன்னலை இது தன் கழுத்தை நீட்டிப் பார்க்க முடியும். புராண்டாசோரஸைப் போலவே டிப்ளடோகஸ் விகாரமான தோற்றமும் முட்டாள் குணமும் கொண்டது. இடியோசைப் பல்லியைப் போலவே இதன் மூளையும் மிக மிகக் குறைவானது. எல்லா டினோசார் களுமே முட்டையிலிருந்து குஞ்சாக வெளிப்படுபவைதான். ஒன்பதடி நீள முள்ள டினோசாரின் முட்டை ஒன்பது அங்குல நீளம் இருக்கும். இந்தக் கணக்குப்படி தொண்ணூறு அடி நீளமுள்ள டிப்ளடோகஸின் முட்டை எத்தனை பெரியதாக இருந்திருக்கும் என்பதைக் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

டிப்ளடோகஸ் என்றால் என்ன பொருள் தெரியுமா? கிரேக்க மொழிப்படி இரண்டு உத்தரங்கள் என்று அர்த்தம். அதாவது கழுத்து ஒரு




காம்டா சோரஸ்

நீண்ட உத்தரம் வால் ஒரு உத்தரம்! இரண்டு நீண்ட (Beams) உத்தரங்களை உடலில் முன்னும் பின்னும் இணைத்தது போன்றிருக்கும் இதன் தோற்றம். சதுப்பு நிலத்தில் வாழும் மற்ற டினோசார்களைப் போலவே இதற்கும் சிறிய தலை. இவ்வளவு பெரிய உடலுக்கு வேண்டிய உணவை இந்தச் சிறிய தலையில் உள்ள வாயினால் எப்படி இந்த மிருகம் உண்டு உயிர்வாழ்ந்தது என்பது ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு புதிராகவே இருக்கிறது. டினோசார்களிலேயே மிக மிக நீளமானது டிப்ளடோகஸ்தான். ஆனால் மெலிந்த கனமற்ற உடல்.

டிப்ளடோகஸ் நாளின் பெரும் பொழுதை நீரிலேயே கழிக்கும். இதன் சின்னத் தலையில் இதன் மூக்கும் கண் களும் மட்டும் மேடாக இருக்கும் இதன் பெரிய உடல் நீருக்குள் மூழ்கி இருக்க தலையை மட்டும் நீர் மட்டத்துக்கு மேலே வைத்துக் கொள்ளும். இது ரொம்பப் புத்திசாலி அல்ல. ஆனால் விரோதிகளிடமிருந்து தப்பும் மார்க்கத்தை மட்டும் அறிந்திருந்தது.

டிப்ளடோகஸ் போலவே ஆனால் உருவத்திலும் பருமனிலும் பெரியதான இன்னொரு டினோசாரும் இந்த உலகில் வாழ்ந்திருக்கிறது. இதற்கு **பிராக்கியாசோரஸ்** (Brachiosaurus) என்று பெயர் – கிரேக்க மொழியில். இதன் பொருள் கையுள்ள பல்லி (Arm Lizard). இதன் முன்னங் கால்களின் எலும்பு மிகப் பெரியதாக இருந்தது. மற்ற டினோசார்களின் பின்னங் கால்கள்தான் பலமாகவும் நீளமாகவும் இருக்கும். ஆனால் பிராக்கியா சோரஸ் இதற்கு விதிவிலக்காக இருந்தது. இது ஐம்பது டன் நிறையுடையதாக இருந்தது. இதனால் தன் உடலைச் சுமந்து கொண்டோ இழுத்துக் கொண்டோ நிலத்தில் நடமாட முடியாது. விரோதிகளோடு போராடவோ தப்பி ஓடவோ இதனால் முடியாது. ஆகவே இதுமுழுக்க முழுக்க நீரிலேயே வாழ்ந்து



டிப்ளடோகஸ்

வந்தது. மிக ஆழமான பகுதிக்குச் சென்று தலையை மட்டும் வெளியே நீட்டிக் கொண்டிருக்கும். இதற்கு இணக்கமாகவே நீண்ட கழுத்தும் முன்னங் கால்களும் அமைந்திருந்தன. அது மட்டுமல்ல. இதன் தலையின் உச்சியில் ஒரு முண்டு இருந்தது. அதில் மூக்குத் துவாரங்கள் அமைந்திருந்தன. சுவாசிப்பதற்கு மூக்கை மட்டும் நீர் மட்டத்துக்கு மேலே வைத்துக் கொண்டு நீரினுள் தன் உடலை மறைத்துக் கொண்டு வாழ இதனால் முடியும். உண்பதற்கு ஏராளமான நீர்த் தாவரங்கள் இதற்குக் கிடைத்தன. நாளெல்லாம் இந்தத் தாவரங்களைச் சுவைத்து அசை போட்டபடி நீருக்குள் நின்று கொண்டிருக்கும் இந்த பிராக்கியாசோரஸ் என்ற டினோசார். ராட்சத மிருகமாக இருந்தும்கூட சுறுசுறுப்பில்லாத வாழ்க்கை. தோற்றத்தில் பெரிதாகவும், மெதுவாக நடமாடுவதாகவும் உள்ள டினோசார்கள்தான் முதலில் அழிவுக்கு ஆட்படலாயின. இந்த வகைய டினோசார்கள் வாழ்வதற்குத் தாழ்வான சதுப்பு நிலங்கள் தேவை. இவைகளின் உணவான மிருதுவான தாவரங்கள் நீரிலும் சதுப்பு நிலங்களிலும்தான் வளர்ந்திருந்தன. காய்ந்த நிலப்பரப்பில் உள்ள தாவரங்களைச் சுவைக்கும் விதத்தில் இவற்றின் பற்கள் வசதியாக இருக்கவில்லை. சதுப்பு நிலங்களில் உள்ள நீர் வற்றியபோது இந்த ராட்சத மிருகங்களினால் காய்ந்த நிலப்பரப்பில் தாக்குப் பிடித்து வாழ முடியவில்லை. மாற்றுத் தாவரங்களை உண்டு இவ்வகை டினோசார்கள் வாழ்ந்திருந்தாலும் கூட எதிரிகளிடமிருந்து தப்பி மறைந்து கொள்வதற்கான ஏரிகள், சதுப்பு நிலங்கள் இல்லாமல் போகவே மாமிச பட்சிணிகளான டினோசார்களிடமிருந்து தப்ப முடியாமல் அழியலாயின.

ராட்சத பல் செட்!

ஆரோக்கியத்தின் வாசல் என்று கூறவேண்டுமானால் நமது திருவாயைத்தான் கூறவேண்டும். சுத்தமான உணவாக மட்டும் இருந்து பயனில்லை. உணவை உட்கொள்ளும் வாயும் சுத்தமாக இருக்க வேண்டும். நம் உடலுக்குள் சுலபமாக நோய்க் கிருமிகள் போகக் கூடிய ஒரே இடம் வாய்தான். அந்த வாயில் ஆகாரங்களை அரைத்து உள்ளே தள்ளும் பற்களின் ஆரோக்கியமே ஒரு மனிதனின் ஆரோக்கியம். பல் இடுக்குகளில் உணவுப் பொருள்கள் தங்கி அது கெட்டு அதிலிருந்து கிருமிகள் உற்பத்தியாவது மிகச் சுலபம். ஆகவே சிறு குழந்தையிலிருந்தே பற்களை அன்றாடம் நன்கு தேய்த்துச் சுத்தமாக வைத்துக் கொள்ளப் பழக்க வேண்டும். இதை நம்மை விட மேலை நாட்டவர் சிறப்பாகக் கடைப்பிடிக்கின்றனர். ஏனென்றால் அங்குதான் பொய்ப் பல் செட்டுக்காரர்கள் அதிகம். கீழுள்ள படத்தில் ஒரு ராட்சத பல் செட்டை வைத்துக்கொண்டு பல் பாதுகாப்பின் அவசியம் பற்றிக் குழந்தைகளுக்கு விளக்கிக் காட்டுகிறார் ஓர் ஆசிரியை. குழந்தைகளும் எத்தனை ஆர்வமுடன் அதில் சிரத்தை காட்டிக் கவனிக்கின்றனர் பாருங்கள். இத்தகைய போதனைகளினால் சிறு வயதிலேயே ஏற்படும் பல் கோளாறுகள் வெகுவாகக் குறைந்து வருகிறதாம்.

—படமும் தகவலும் ஜெர்மன் செய்தி



மலரும் பூவெனப் பிள்ளை
வளர்ந்திடப் பலமான துணை—
இன்க்ரிமின்*

இளமைப் பருவம்—பூவாய் மலரும் நாட்கள்—மலர்ந்து சிரித்து உங்கள் மனத்தை அள்ளி வளரும் பருவம்...இப் பருவத்தில் அவனுக்குக் கட்டாயம் தேவை—இன்க்ரிமின். பின்னர் பாருங்களேன் அவன் வளர்ச்சியை! பசித்துப் புசிப்பான்... உண்ணும் உணவெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக மாறும். நலம் தரும் வைட்டமின்கள், இரும்புச் சத்து, இவற்றோடு உங்கள் மகனின் வளர்ச்சிக்கு மிகமிக அத்தியாவசியமான அமினோ அமிலம், லைஸின் யாவும் நிறைந்தது இன்க்ரிமின்.



இன்க்ரிமின்* டானிக்

டிராப்ஸ்: 2 மாதங்கள் முதல் 2 வயது வரையில்
ஸிரப்: 14 வயது வரையில்

உணவையெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக்கும்
உங்கள் பிள்ளை பூவாய் மலர்ந்து சிரிக்கும்!

டாக்டர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெயர்—
Lederle ஸயனமிட் இந்தியா லிமிடெடின் ஒரு பிரிவு

*அமெரிக்கன் ஸயனமிட் கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க்


175 ml.
Incremin syrup
VITAMINS B1, B6, B12
LYSINE
WITH IRON
TONIC APPETITE STIMULANT
Incremin
syrup

நமது தூய ரத்தம்

நாராயண்

இரத்தம் என்ற உடனேயே, ''ஓ! அதுதானே! காயம் பட்டால் சிவப்பாக வருமே!'' என்று உடனே கூறுவீர்கள். உங்களில் பலருக்கு உடம்பில் ஓடும் இரத்தத்தைப் பற்றி முழு விவரம் தெரியாது.

நமது உடலில் இரத்த ஓட்டத்தை முதலில் கண்டு பிடித்தவர் வில்லியம் ஹார்வி என்பவர். இவரைத் தொடர்ந்து வந்துள்ள விஞ்ஞானிகள் மேலும் இரத்தத்தைப் பற்றி விரிவாக ஆராய்ந்து பல உண்மைகளைக் கண்டு பிடித்துள்ளனர். இரத்தத்தைப் பற்றி மேலும் மேலும் ஆய்வுகள் உலகம் முழுவதும் நடந்து கொண்டேயிருக்கின்றன.

இரத்தம் நமது உடல் எடையில் ஒன்றில் இருபது பாகம் உடையது. அது வெறும் சிவப்புத் திரவம் அல்ல. பல வகைத் திசுக்களில் ஒன்றுதான் இரத்தம். இதில் கார்பஸில்ஸ் (*Carpuscles*) என்பவை மிதக்கும் (*in suspension*). தண்ணீரைவிட அடர்த்தி உள்ளது (*Specific Gravity 1.55*) இரத்தம். இது உப்புச் சுவையும், கார (*alkaline*) குணமும் உடையது.


புது இரத்தத்தை ஒரு சோதனைக் குழாயில் சிறிது நேரம் வைத்திருந்தால் அதில் இரண்டு பாகங்களைக் காணலாம். ஒன்று கட்டியாக அடியிலும் மற்றது மஞ்சள் திரவமாக மேலேயும் இருக்கும். கட்டியாக உள்ளதில் சிவப்பணுக்களும், வெள்ளை அணுக்களும் இருக்கும். இதைத்தான் கார்ப்பஸில்ஸ் என்று முன்னமே குறிப்பிட்டோம். மஞ்சள் திரவம் பிளாஸ்மா (*Plasma*) எனப்படும். இதில் தொண்ணூறு சதவிகிதம் தண்ணீரும், பத்து சதவீதம் மற்ற தாதுப் பொருட்கள், புரதங்களாகிய சீரம் குளோபிலின், சீரம் ஆல்புமின், ஃபைபிரினோஜென் (*Fibrinogen*) முதலியவையும் உள்ளன.


சிவப்பணுக்கள்

ஒரு கன மில்லி மீட்டரில் சுமார் 5,000,000 சிவப்பணுக்கள் உள்ளன என்றால் இவற்றின் சிறிய உருவத்தை நீங்களே கற்பனை செய்து கொள்ளலாம். மேலும் இவை இரண்டு பொருட்களால் ஆனவை. ஒன்று ஹேம் (*Haem*) எனப்படும் இரும்புச் சத்தும், குளோபின் (*Globin*) எனப்படும் புரதச்சத்தும் கலந்து விளங்கும் ஹேமோகுளோபின் எனப்படும் பிக்மெண்ட் (*Pigment*). ஆகும் இதன் வேடிக்கையான, ஆனால் முக்கிய வேலை என்ன தெரியுமா? நாம் உள்ளிழுக்கும் காற்றில் உள்ள பிராண வாயுவைப் (*Oxygen*) பிடித்துத் திசுக்களுக்குக் கொண்டு செல்வதாகும். இந்தப் பிராண வாயு, திசுக்களில் உள்ள உணவுப் பொருள்களை ஆக்ஸிகரணம் (*Oxidation*) செய்து நமக்குப் போதிய பலம் (*Energy*) தருவதுதான். சிவப்பணுக்கள் வட்டமாகவும் இரு பக்கம் குழிந்தும் இருக்கும். இவற்றின் வாழ்நாள் மூன்று முதல் நான்கு வாரம்தான். இதற்குப் பின் இவை கல்லீரலில் (*Lever*) அழிக்கப்படுகின்றன. புதிய அணுக்கள் எலும்பின் நடுப் பகுதியிலும் (*marrow*) கல்லீரலிலும், கணையத்திலும் உண்டாக்கப்படுகின்றன.

வெள்ளை அணுக்கள்

இவற்றுக்கு நிறமே இல்லாததால் இவை லியூக்கோஸைட்ஸ் (*Leucocytes*) எனப்படும். குறிப்பிட்ட வடிவும் இல்லாதது இது. அமீபா போலவும் நகர்வதால் அமீபோஸைட்ஸ் (*Amoebocytes*) என்றும் சொல்லப்படும். இவற்றின் முக்கிய வேலை நமது உடலில் நுழைந்து நமது பலத்தை ஆழம் பார்ப்பதும், நுண்ணிய நோய்க் கிருமிகளை அழிப்பதும் தான். இதனால் இவை ஃபாகோஸைட் (*Phagocytes*) எனவும் கூறப்படும். இவை பல வகைப்பட்டவை. அவை





யாவன: மோனேனைஸட், லிம்ஃபோஸைட், நியூட்ரோபில், பேசோஃபில், ஈசனோஃபில் எனப்படும். (மேல் படம்) இவற்றின் சராசரி அளவு ஓர் அங்குலத்தை 2500 பாகங்களாக்கினால் எவ்வளவோ அவ்வளவு. ஆயிரம் சிவப்பணுக்களுக்கு ஒரு வெள்ளையணு என்னும் விகிதத்தில் இவை காணப்படும். சிறு புண் வந்து 'சீழ் வருகின்றது' என்று நாம் கூறும் சீழ் இந்த வெள்ளையணுக்கள் கிருமிகளுடன் போராடி இறப்பதால் உண்டாகின்றது. நெறி கட்டிக் கொள்வதும் இவையால்தான்.

இரத்தம் உறைதல்

இவை தவிர இரத்தத்தில் பலவகையான வடிவுடைய பிளேட்லெட்ஸ் (Platelets) என்பனவும் உண்டு. இவை சிவப்பணுக்களின் அளவில் பாதிதான். இரத்தம் காற்றுப்பட்டவுடன் உறைவது இந்தப் பிளேட்லெட்சுகள் வரக்கும் ஒரு வகை நீரால்தான். இந்நீருக்குத் திராம்போகினேஸ் என்று பெயர். இரத்தம் உறைதல் (Blood Clotting) ஒரு முக்கிய இரத்த அம்சமாகும். இந்த இரத்தம் உறையும் தன்மை, நம் உடம்பில் காயம் ஏற்பட்டால் இரத்தச் சேதத்தைத் தடுக்க உதவும். ஊசி போடும்போது ஒரு சிறு காற்றுக் குமிழ் இரத்தக் குழாய்க்குள் சென்றுவிட்டால் கூட உயிருக்கு ஆபத்து வரும். டயபெட்டிஸ், நக்ரோஸிஸ் (Nacrosis) இவற்றால் துன்பப்படுபவர்க்கு இரத்தம் காற்றுப் பட்டால் உறையாது. ஆதலால் மருத்துவர்கள் இவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யத் தயங்குவார்கள்.

இரத்தத்தின் முக்கிய வேலைகள்

நமது உடலை ஒரே சீரான சூட்டுடன் (Body Heat) இருக்கச் செய்வது இரத்தம்தான். மேலும் திசுக்களில் (Tissue) ஆக்ஸிகரணம் ஏற்படப் பிராண வாயுவைச் சுமந்து சென்று கொடுப்பதும், நாளமில்லாத பல சுரப்பிகளின் நீர்களைச் (Harmones) சுமந்து சென்று பல பாகங்களுக்குக் கொடுப்பதும் நமது உடற்கழிவைச் சுமந்து சென்று கழிவு உறுப்புக்களாகிய சிறுநீரகம், தோல், நுரையீரல், பெருங்குடல் ஆகியவற்றுக்குத் தருவதும் இரத்தத்தின் பணியே. நமது உடலில் நுழைந்து நமக்குப் பல வியாதிகளை உண்டாக்கும் கிருமிகளை அழிப்பதும் இரத்தத்தின் வேலையே!

o o o o o o o முதல் பக்கத்துப் படங்களுக்கான விளக்கம் o o o o o o o

☐ முதல் மரம் விசிறி வாழை எனப்படும் யாத்ரீகர்களின் பனை—டிராவலர்ஸ் பாம் — இதில் ஒரு குவார்ட் சுத்தமான தண்ணீர் தேக்கி வைக்கப் பட்டிருக்கும். வழிப்போக்கர்கள் தாகத்தினால் தவிக்கும் போது இந்தமரத்தில் ஒரு வெட்டுப் போட்டால் நீர் கொட்டும். தாகம் தீர்ந்து வழி நடப்பார்கள்.

இரண்டாவது மரம் இலங்கையில் காணப்படுகிறது. மெழுகு வத்தி மரம்—காண்டில் ட்ரீ — என்று பெயர். இதன் காய்கள் மெழுகு வத்தி போல் இருப்பது மட்டும் அல்ல. இது பிரகாசம் தரும் ஒரு வகை எண்ணெயையும் கொண்டிருக்கிறது.

மூன்றாவது சீசா மரம்—பாட்டில் ட்ரீ— இது ஆப்பிரிக்காவில் காணப்படுகிறது. இதன் அடிமரத்தில் உள்ள பஞ்சு போன்ற மிருதுவான மரச் சோறு உணவாகவும் குடி நீராகவும் பயன்படுகிறது.


☐ அராபியர்களின் குத்து வாள் இது. அகலமாகவும் நுனி வளைந்தும் உள்ள இதை உறையிலிருந்து உருவுவது கஷ்டம் போலத் தோன்றுகிறது இல்லையா? ஆனால் உறையைப் போலக் கத்தி உள்ளே அத்தனை தூரத்துக்கு வளைந்திருக்காது. அந்த வளைவு அழகுக்காகத்தான்.

☐ துடுப்பு மீன் பார்க்கப் பயங்கரமாக இருந்தாலும் வெற்றி என்னவோ கருமீனுக்குத்தான்.

☐ தாய்ப் பாசம்தான். தன் குட்டியிடம் வாலாட்டும் முதலைகளைத் தாய் ஹிப்போ சும்மா விடாது. முதலையின் தோல் என்ன கெட்டியானாலும் கூட ஹிப்போவின் உறுதியான பற்களும் அதன் பலமான பிடியும் முதலைகளைச் செந்நீர் வடிக்க வைத்துவிடும்.

☐ மலேயா தீபகற்பத்தில் உள்ள மலாக்கா நாட்டின் பணமரம் இது. அந்த நாட்டின் நாணயங்கள் முன்பு இதே மாதிரிதான் வார்க்கப்பட்டன. இந்த நாணய மரத்திலிருந்து தேவையான நாணயங்களை முறித்துச் செலாவணிக்கு வழங்குவர். ஒரு முறை இப்படிப் பதிக்கப்பட்ட நாணயங்களைப் பிறகு நூலில் சேர்த்துக் கட்டி வைத்துக் கொள்ளுவார்கள்.

தெரியுமா ?



1841. கணிதத்தின் ஒரு பகுதியான ஜ்யோமிதியின் தத்துவங்களை கி. மு. 300-ல் வாழ்ந்த ஒரு கிரேக்க கணித நிபுணர் உருவாக்கினார். அவர் பெயர் என்ன?

1842. மின் அமைப்புக்களில் ஃபியூஸ் எதற்காக வைக்கப்பட்டுள்ளது?

1843. ஆண்கள் ஒற்றையர் ஆட்டத்தில் 1971-ல் விம்பிள்டன் வீரர் யார்?

1844. ஆண்கள் ஆட்டத்தில் 1971ல் பாரதத்தின் எந்த மாகாணம் பாட்மிண்டனில் முதலாவதாக வந்தது?

1845. இந்தியாவின் பலசாலி என்ற பட்டத்தை 1971ல் மிக அதிகமான பளுவைத் தூக்கிப் பெற்றவர் யார்?

1846. அமெரிக்காவிலுள்ள ஃபாரெஸ்ட் ஹில்ஸ் (Forest Hills) என்னுமிடத்தில் விளையாடப்படும் ஆட்டம் என்ன?

1847. டெல்லியிலுள்ள டெஸ்ட் கிரிக்கெட் மைதானத்தின் பெயர் தெரியுமா?

1848. துப்பாக்கி சுடுவதில் நிகரற்று விளங்கிய ஒரு பெண் அர்ஜுனா பதக்கத்தைப் பெற்றிருக்கிறார். அவர் பெயர் தெரியுமா?

1849. உலகிலேயே நீரினுள் மிக வேகமாக நீந்திச் செல்லக்கூடிய மீன் எது தெரியுமா?

1850. உலகின் மிகப் பெரிய யுத்தக் கப்பலின் பெயர் என்ன?

1851. நீர் வாத்துக்களின் கூட்டம் பறக்கும்போது எப்படி இருக்கும்?

1852. அணுசக்திக் கமிஷனின் இன்றைய அக்ராசனர் (Chairman) யார்?

1853. 'பங்களா தேஷை' இந்தியாவுக்கு அடுத்தபடியாக அங்கீகரித்த நாடு எது?

1854. பக்ரா அணையைத் திட்டமிட்டுக் கொடுத்த அமெரிக்க எஞ்சினீயரின் பெயர் தெரியுமா?

1855. பசிபிக் கடலில் பல தீவுகள் ஏற்படுவதற்குக் காரணமான கடல் வாழ் ஜந்துவின் பெயர் என்ன?

1856. இந்தியா விடுதலை அடைந்த பிறகு முதல் பொதுத் தேர்தல் எந்த ஆண்டில் நடந்தது?

1857. உலகிலேயே மிக நீளமான ரயில் பாலம் எது, எங்குள்ளது?

1858. அசோக சக்கரத்தில் மொத்தம் எத்தனை பிரிவுகள் (ஆரைகள்) இருக்கின்றன என்று சொல்லத் தெரியுமா?


1859. பாரதத்தில் அரசியல் நிர்ணயச் சட்டம் அமலுக்கு வந்த ஆண்டு எது தெரியுமா?

1860. இண்டர்போல் (Inter Pol) என்றால் என்ன?

1861. விமானங்களிலேயே மிக அதிகமாகப் பயணிகளைச் சுமந்து போகக் கூடிய விமானம் எது?

1862. ஆண்டுதோறும் முஸ்லிம் மக்கள் மெக்கா, மதினாவுக்குச் செல்லும் புனித யாத்திரைக்கு ஒரு பெயர் உண்டு. அது என்ன?

தெரியுமே !



விடைகள்: 1841. யூக்ளிட் என்பவர். 1842. அதிக மின் ஓட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் அதனால் மின் அமைப்பு பழுதுபடுவதிலிருந்து காப்பதற்கும். 1843. ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஜே. டி. நியூகோம்ப். 1844. தமிழ் நாடு. 1845. மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த மானுவல் சில்வேரியா என்பவர் 395 கிலோ எடையைத் தூக்கிப் பெற்றார். 1846. டென்னிஸ். 1847. பிரோஸ்ஷா கோத்லா மைதானம். 1848. கோடாவைச் சேர்ந்த குமாரி புவனேஸ்வரி. 1849. அட்லாண்டிக் கடலில் வாழும் செயில் ஃபிஷ் மணிக்கு 78 - 80 கி. மீட்டர்கள் வேகம். 1850. அமெரிக்காவைச் சேர்ந்த எண்டர்பிரைஸ் - ஏழாவது கடற்படையில் உள்ளது. 1851. ஆங்கில எழுத்து 'V' போன்ற அமைப்பில் பறந்து செல்லும். 1852. டாக்டர் ஹோமி.என். சேத்னா. 1853. பூடான். 1854. ஹென்றி ஸ்லோகாம் (Henry slokam). 1855. பவழப் பூச்சிகள். 1856. முதல் பொதுத் தேர்தல் நடந்தது 1952ல். 1857. லூசியானா மாகாணத்தில் நியூ ஆர்லாண்டில் உள்ள ஹூ-வே பி.லாங் (Huey P. Long) பாலம்—ஏழாயிரம் மீட்டர் நீளம். 1858. இருபத்தி நான்கு. 1859. 1952ம் ஆண்டில் ஜனவரி 26ந் தேதி. 1860. சர்வதேச போலீஸ் அமைப்பு (International Police Organisation). 1861. போயிங் - 747. 362 லிருந்து 490 பேர்வரை இதில் பிரயாணம் செய்யலாம். 1862. ஹஜ் யாத்திரை.

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்


சேதி...இனிய சேதி...
வந்துவிட்டது இதோ
காப்ளின்ஸ்!!
PARLE
gobblins
FRUITY TOFFEES
புதிய
காப்ளின்ஸ்
ஃப்ரூட் டாஃபி
ருசியோருசி...
ருசித்திட குஷி!
எலுமிச்சை, அன்னாசி, ராஸ்ப்பெரி, ஆரஞ்சு சுவைநயங்களிலே
வருகின்றன காப்ளின்ஸ் ஃப்ரூட் டாஃபிக்கள்.
பார்லே
everest/734/PP-tm